# ஊரக வளர்ச்சி
# மற்றும்
# ஊராட்சித் துறையின் சாதனைகள்
## (மே 2006 – செப்டம்பர் 2010)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

தமிழ்நாடு

# பொருளடக்கம்


| வ. எண் | விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 1 – 45 |
| 2. | தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | 46 – 53 |
| 3. | வாழ்ந்து காட்டுவோம் திட்டம் | 54 – 57 |
| 4. | சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் | 58 – 62 |

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## I ஊராட்சி நிர்வாகம்

- தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் 2006ல் நடத்தப்பட்டன. ஊரகப் பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 76 சதவீதம் மக்கள் வாக்களித்தனர்.

**அட்டவனை – 1**
**இட ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:**

| வ எண். | பதவி | மொத்தபத வியிடங்கள்/ தலைமைபத வியிடங்கள் | பெண்கள் | | ஆதிதிராவிடர் | | பழங்குடியினர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| 1. | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 | 10 | 34 | 7 | 24 | 0 | 0 |
| 2. | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36 | 87 | 23 | 4 | 1 |
| 3. | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,618 | 4,275 | 34 | 3,143 | 25 | 156 | 1 |
| 4. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 656 | 226 | 34 | 154 | 23 | 8 | 1 |
| 5. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,570 | 2,302 | 35 | 1,534 | 23 | 64 | 1 |
| 6. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 | 32,638 | 33 | 24,630 | 25 | 983 | 1 |

- பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்த **பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டகச்சியேந்தல்** கிராம ஊராட்சிகளுக்கு அக்டோபர் 2006ல் வெற்றிகரமாக தேர்தல்கள் நடத்தப்பட்டது. தேர்தலில் புதியதாக வெற்றி பெற்ற கிராம ஊராட்சித்தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் கிராம சமுதாய தலைவர்களையும் அழைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்னையில் **13.11.2006** அன்று ‘**சமத்துவப் பெருவிழா**’ நடத்தி கௌரவித்தார்.

**உயர்நிலைக்குழு :**

- உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கிட வேண்டி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் **உயர் நிலைக் குழு** அமைக்கப்பட்டது. இக்குழுவின் முதல் கூட்டம் **7.3.2007** அன்று நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பங்கேற்புடன் உள்ளாட்சி பிரதிநிதிகள் கருத்தரங்கம் 18.3.2007 அன்று நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, மண்டல வாரியாக, ஈரோடு (24.07.2007), திருச்சி (25.07.2007), திருவண்ணாமலை (03.08.2007), விருதுநகர் (23.08.2007) ஆகிய இடங்களில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இக்குழுவின் இரண்டாவது கூட்டம் **19.09.2007** அன்று நடைபெற்றது. மேலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது தொடர்பாக பிற துறை செயலாளர்களுடன் கலந்துரையாடல் 11.10.2007 மற்றும் 12.10.2007 ஆகிய தேதிகளில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதனடிப்படையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குதல் குறித்து அமைக்கப்பட்டுள்ள உயர் நிலைக் குழுவின் அறிக்கை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், **10.12.2007** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. இக்குழு, **39** பொருள்களில் அளித்துள்ள **99** பரிந்துரைகளில், இதுவரை **61** பரிந்துரைகளின் மீது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதர பரிந்துரைகளின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரசாணைகள் விரைவில் வெளியிடப்படும்.

**ஊராட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்**

அரசால் ஏற்கனவே உரிய உத்தரவுகள் வழங்கப்பட்ட மூன்றாவது உயர்நிலைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் சமூக தணிக்கை செய்யும் அமைப்பாக கிராம சபை செயல்பட வேண்டும்.
- தனிநபர் பயன்பெறும் அனைத்துத் திட்டங்களின் பயனாளிகள் பட்டியல் கிராம சபையால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.
- கிராம ஊராட்சிகளிலுள்ள பல உறுப்பினர் வார்டு முறையை நீக்கி ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ளது போலவே ஒரு உறுப்பினர் உள்ள வார்டு முறையைக் கொண்டுவருதல்.
- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகாலத்தில் நிலைத்த தன்மையினை கொண்டு வரும் நோக்கில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதிலும், நிறைவேற்றுவதிலும் உள்ள விதிமுறைகளை கடுமையாக்குதல்.

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1–ஆம் தேதியினை "உள்ளாட்சிகள் தினமாக" கொண்டாடுதல்.
- ஊராட்சி அமைப்புகள் செயல்பாட்டில் பெரிய அளவில் சுதந்திரம் அளிக்கும் வண்ணம் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரம்பினை உயர்த்துதல்.
- கிராம ஊராட்சிக் கணக்குகளை ஒழுங்குமுறைப்படுத்துதல்.
- மூன்றடுக்கு ஊராட்சிகளின் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)–ஐ ஊதியம் வழங்கும் அலுவலராக்குதல்.
- அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதி வழங்குதல்.
- ஊராட்சி ஒன்றியங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி.
- ஊராட்சி அமைப்புகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் முக்கிய அலுவலர்களுக்கு வாகனங்கள்.
- நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் கொண்டு வருதல்.
- ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்பு குறித்து திட்டமிடுதல்.
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நூலகங்கள் மற்றும் விளையாட்டு மையங்கள் அமைத்தல்.
- கிராம அளவில் பிறதுறைகளுக்கான பயனாளிகளை தேர்வு செய்வதிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் கிராம ஊராட்சியே கிராம அளவிலான குழுவாக செயல்படுதல்.
- அரசாணை எண்.160, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.1) துறை, நாள்: 30.09.2008ல் கிராம சபைக் கூட்டம் நடத்துவதற்கான செலவின வரம்பினை ரூ.500/–லிருந்து, ரூ.1,000/–ஆக உயர்த்தி அரசு உத்தரவிட்டுள்ளது.
- **ஊரக உள்ளாட்சிகளின் எல்லைகளை வரையறை செய்தல் –** பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, **ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவற்றின் எல்லைகளை மாற்றியமைத்தல்,** அவைகளை பிரித்தல் சம்பந்தமாக மக்களின் கருத்தறிந்து, அவற்றினை பரிசீலனை செய்து பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பியுள்ளனர். துறைத் தலைவர்கள் உரிய பரிசீலனைக்குப் பின்பு இது குறித்தான இறுதி அறிக்கையை அரசுக்கு அனுப்புவர். இதுவரை அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 397 பரிந்துரைகள் வரப்பெற்றுள்ளன. அரசு இக்கருத்துருக்களை பரிசீலித்து தகுதியின் அடிப்படையில் உரிய முடிவுகளை அறிவிக்கும்.

- **தலவரி மற்றும் தலமேல் வரிவிதிப்பு நீக்கம் –** 2009–10ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது அரசு விவசாயிகளின் பேரில் வரி சுமை ஏற்றாமல் தற்போதுள்ள தலவரி மற்றும் தலமேல் வரி வசூல் முறையினை எளிதாக மாற்றியமைக்கப்படும் என்று அறிவித்தது. அரசின் இந்த முடிவின்படி தலவரி மற்றும் தலமேல் வரி விதிப்பதை நீக்கம் செய்வது அவசியமாகிறது. எனவே தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 167,168,169,176,186 (பி) மற்றும் 188 (டி) ஆகிய பிரிவுகள் சட்டத் திருத்தம் 12/ 2009 ல் திருத்தம் செய்யப்பட்டு தலவரி மற்றும் தலமேல் வரி வசூலிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது.

- **பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றம் செய்தல் –** கிராம ஊராட்சிகளில் மட்டும் பல உறுப்பினர்கள் வார்டுகள் நடைமுறையில் உள்ளது ஆனால் இதர ஊரக உள்ளாட்சி மற்றும் நகர்புற உள்ளாட்சிகளில் இது போன்று இல்லை. இது தேர்தல் நேரத்தின் போது வாக்காளர்கள் வாக்கு அளிப்பதிலும் வாக்குகள் எண்ணிக்கையின்போதும் பல இன்னல்களை உருவாக்குகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட மூன்றாவது உயர்மட்டக் குழு கிராம ஊராட்சிகளில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றம் செய்திட பரிந்துரை செய்தது. எனவே தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல் பிரிவு 12 திருத்தம் செய்யப்பட்டு கிராம ஊராட்சிகளில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை நீக்கம் செய்து அவற்றிற்கு பதிலாக ஒரு உறுப்பினர் கொண்ட வார்டுகளாக தமிழ்நாடு சட்டம் 20/2009–ன் படி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒரு உறுப்பினர் வார்டு முறையானது 2011 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல்களில் போது கிராம ஊராட்சிகளில் நடைமுறைக்கு கொண்டுவரப்படும்.

- **குளம் குட்டை பராமரிப்பு –** பாரம்பரியமாக, சிறு குளங்களை ஊராட்சிகளே பராமரித்து வந்தன. சட்ட வழியாக எந்தவித அறிவிப்பும் இல்லாத போதிலும் சிறு பாசன குளங்களை ஊராட்சி ஒன்றியங்களே பராமரித்து வந்தன. மேற்படி நீர்நிலைகள் புதுப்பித்தல், பராமரித்தல், போன்றவற்றிற்கு மத்திய / மாநில திட்ட நிதிகள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாக குளம்/ குட்டை போன்றவைகளை பழுதுபாத்தல், பராமரித்தல போன்ற பணிகள் ஊராட்சிகளுக்கு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 110 (ஜி) ன் மூலம் வழங்கப்பட்டது ஒரு முரண்பாடாகும்.

  எனவே இந்த முரண்பாட்டை சட்டப்படி சரிசெய்யவும் குட்டை பராமரிப்பு பணிகளை கிராம ஊராட்சிகளுக்கு சட்டரீதியாக ஒப்படைத்திடவும் மேலும் குளங்களின் பராமரிப்பு பணிகளை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைத்திடவும் அதனை மேற்பார்வையிட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் அளித்திட தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 110 (ஜி) மற்றும் 112 (ஏஏ) ஆகியவற்றிற்கு தமிழ்நாடு சட்ட எண் 28/2009–ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

**பொய் சாதி சான்றிதழ் பெற்றிருப்பவர்களை தகுதி நீக்கம் செய்தல்**

- பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்கான தேசிய ஆணையமானது, தனது ஏழாவது அறிக்கையில் "நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவை, மாநகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில், பொய்யான சாதிச்சான்றிதழ் பெற்றிருப்பவர்களை உடனடியாகப்

பதவிப் பொறுப்பிலிருந்து அல்லது பதவியிடத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டும்; மற்றும் சட்டத்தின்படி வகை செய்யப்பட்டுள்ள தண்டனை வழங்கப்படுவதுடன் குறைந்தது 6 ஆண்டு காலம் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடை செய்யப்படுதல் வேண்டும்"– என்று பரிந்துரைத்துள்ளது.

- இந்திய அரசு, மேற்சொன்ன பரிந்துரையின் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுகளை கேட்டுக்கொண்டது. பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்கான தேசிய ஆணையத்தின் மேற்சொன்ன பரிந்துரைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 37–ல், (2–ஏ) என்ற ஒரு புதிய உட் பிரிவு, தமிழ்நாடு 2009ஆம் ஆண்டு சட்ட எண்.14ன் படி சேர்க்கப்பட்டுள்ளது.

**தபால் வாக்குச் சீட்டுகளை பெறுவதற்கான காலவரம்பினை நீட்டித்தல்**

- தமிழ்நாடு ஊராட்சி (தேர்தல்) விதிகள், 1995–ன் விதி 52ன் படி தேர்தல் நடக்கும் நாளிற்கு முதல் நாள் மாலை 5.00 மணி வரை தபால் வாக்குச் சீட்டுகளை பெற்றுக் கொள்ளலாம் என்று இருந்தது. இருந்த போதிலும், அரசு மேற்படி விதி 52–ன் துணை விதி (2)ல் உரிய திருத்தங்களை மேற்கொண்டு தபால் வாக்குச் சீட்டுகளை வாக்கு எண்ணிக்கை நாளன்று காலை 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம் என்று வரையறுத்து, அரசாணை எண்.1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1), துறை, நாள் 02.01.2009ன் படி அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

**விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூல் செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்குதல்**

- 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (விளம்பரப் பலகைகளுக்கான உரிமம் வழங்குதல், விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூல் செய்தல்) விதிகளின் முந்தைய வழிவகைகளின்படி ஊரக பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவுவதற்கு உரிமம் வழங்கவும் மற்றும் அவ்வாறான விளம்பர பலகைகளில் உள்ள விளம்பரங்களுக்கு வரி விதித்தல் மற்றும் வசூல் செய்யும் அதிகாரம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் செயல் அலுவலருக்கு (கிராம ஊராட்சித் தலைவருக்கு) வழங்கப்பட்டிருந்தது. ஆனால், நகர்ப்புற பகுதிகளைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித்தலைவரே உரிமம் வழங்கும் அதிகாரியாக உள்ளார். மேலும், விளம்பர பலகைகள் நிறுவுதல் குறித்த சட்ட வழிவகைகளை வலுவுடன் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் கிராம ஊராட்சிகளால் இயலாத நிலை இருந்தது.

- ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகளுக்கான உரிமம் வழங்குவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்தவும், விளம்பர பலகைகள் நிறுவுதலை கண்காணிக்கவும், நகர்ப்புற சட்டத்திற்கு இணையாக, விளம்பர பலகை நிறுவ உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பர வரி விதிப்பு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வழங்கி, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 172–A, 172–B மற்றும் 220ஆம் பிரிவின் உட்பிரிவு (2), (3) மற்றும் (5)ல் உரிய சட்டத்திருத்தம் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்திருத்தம் கொண்டு வந்ததன் விளைவாக, முந்தைய விதிகள் நீக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (விளம்பர பலகைகளுக்கான

உரிமம் வழங்குதல், விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூல் செய்தல்) விதிகள், அறிவிக்கையாக, அரசாணை (நிலை) எண்.41, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.1) துறை, நாள் 18.05.2009ன் படி அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**விருதுகள்**

**ஊராட்சிகள் திறமையாகவும் பொறுப்பாகவும் செயல்படுவதை ஊக்குவிக்கும் திட்டம்**

- ஊராட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதில் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்திய அரசின் ஊராட்சி அமைச்சகமானது மாநிலங்களுக்கு தர வரிசை வழங்கி வருகிறது. ஊராட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதில் மேற்கொண்டு வரும் செயல்பாடுகளின் அடிப்படையில் தமிழ்நாடானது இத்தர வரிசைப் பட்டியலில் முதல் ஐந்து இடங்களுள் ஒன்றினைப் பெற்று வருகிறது. ஊராட்சிகளுக்கான அதிகார பகிர்ந்தளிப்பில் 2006–07ஆம் ஆண்டில் இந்திய அரசின் தர வரிசைப் பட்டியலில் தமிழ் நாடு **நான்காவது இடத்தினைப்** பெற்றது. 2007–08 ஆம் ஆண்டில் **முதல் இடத்தினையும்,** 2008–09ஆம் ஆண்டில் **மூன்றாவது இடத்தினையும் மற்றும்** 2009–10ஆம் ஆண்டில் **இரண்டாவது இடத்தினையும்** பெற்றுள்ளது. 2006–07ஆம் ஆண்டில், இந்திய அரசின் ஊராட்சி அமைச்சகமானது ஊராட்சிகள் திறமையாகவும் பொறுப்பாகவும் செயல்படுவதை ஊக்குவிக்கும் திட்ட (PEAIS) நிதியாக தமிழ்நாட்டிற்கு ரூ.82.64 இலட்சத்தினை விடுவித்தது. இதே போன்று 2007–08ஆம் ஆண்டில் ரூ.1 கோடியும், 2008–09 மற்றும் 2009–10 ஆகிய ஆண்டுகளுக்காக தலா ரூ.1.5 கோடியும் தமிழ் நாட்டிற்கு விடுவித்துள்ளது.
- 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஊராட்சிகள் திறமையாகவும் பொறுப்பாகவும் செயல்படுவதை ஊக்குவிக்கும் திட்ட நிதியினைக் கொண்டு, 29 மாவட்ட ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களுக்கு கணினி மற்றும் அச்சுப் பொறிகளை அரசு வழங்கியுள்ளது. மேலும், 2008–09ஆம் ஆண்டிற்கான இத்திட்ட நிதியினைக் கொண்டு, 29 மாவட்ட ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களின் உபயோகத்திற்காக இன்வெர்ட்டர்களை (Inverters) அரசு வழங்கியுள்ளது.

**உத்தமர் காந்தி ஊராட்சி விருது**

- ஆண்டுதோறும் சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் 15 கிராம ஊராட்சிகளை கௌரவிக்கும் வகையில், அரசால் "**உத்தமர் காந்தி ஊராட்சி விருது**" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **2006–07**ஆம் ஆண்டுக்கான '**உத்தமர் காந்தி ஊராட்சி விருதுக்கு**' தெரிவு செய்யப்பட்ட **15** கிராம ஊராட்சிகளுக்கு கேடயமும், ரூபாய் **5 லட்சம்** ரொக்கப் பரிசும் அந்த காலத்தில் பதவி வகித்த கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் பதக்கமும் நற்சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **10.10.2007** அன்று வழங்கப்பட்டது. **2007–08**ஆம் ஆண்டுக்கான '**உத்தமர் காந்தி ஊராட்சி விருதுக்கு**' தெரிவு செய்யப்பட்ட **15** கிராம ஊராட்சிகளுக்கு கேடயமும், ரூபாய் **5 லட்சம்**

ரொக்கப் பரிசும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் பதக்கமும் நற்சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **19.12.2008** அன்று வழங்கப்பட்டது.

**அட்டவணை –2**

**2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டிற்கான உத்தமர் காந்தி ஊராட்சி விருது**

**விருதுபெற்ற ஊராட்சிகள்**

| | 2006–07 | | 2007-08 | |
|---|---|---|---|---|
| வ எண். | மாவட்டம் | ஊராட்சி | மாவட்டம் | ஊராட்சி |
| 1. | கோயம்புத்தூர் | ஒடந்துறை | திருநெல்வேலி | கீழவெள்ளகால் |
| 2. | ஈரோடு | திண்டல் | விருதுநகர் | பெத்துரெட்டியபட்டி |
| 3. | இராமநாதபுரம் | மைக்கேல் பட்டிணம் | இராமநாதபுரம் | தாமரைக்குளம் |
| 4. | சிவகங்கை | நாலுகோட்டை | நாகப்பட்டிணம் | விழுந்தமாவடி |
| 5. | வேலூர் | காட்டுப்புத்தூர் | திருவாரூர் | பள்ளிவர்த்தி |
| 6. | சேலம் | சின்னனூர் | திருநெல்வேலி | இடையன்குடி |
| 7. | திருவாரூர் | கீழத்திருப் பாலைக்குடி | தஞ்சாவூர் | சீனிவாசநல்லூர் |
| 8. | கன்னியாகுமரி | திக்கணங்கோடு | இராமநாதபுரம் | திருவரங்கம் |
| 9. | திருச்சி | வாளாடி | கரூர் | ஈசநத்தம் |
| 10. | தேனி | லெட்சுமிபுரம் | நீலகிரி | தும்மனட்டி |
| 11. | நாமக்கல் | காடச்சநல்லூர் | தேனி | இராமசாமி நாயக்கன்பட்டி |
| 12. | காஞ்சிபுரம் | பாப்பநல்லூர் | நாமக்கல் | முதலைப்பட்டி |
| 13. | கடலூர் | மா. கொளக்குடி | திண்டுக்கல் | ம.மு.கோவிலூர் |
| 14. | விழுப்புரம் | ஜக்காம்பேட்டை | ஈரோடு | மைலம்பாடி |
| 15. | திண்டுக்கல் | கொ.கீரனூர் | சிவகங்கை | காட்டேந்தல் சுக்கானூரணி |

• 2008–09 ஆம் ஆண்டிலும், சிறந்த 15 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களால் 19.07.2010 அன்று வழங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு கேடயமும் மற்றும் ரூ.5 இலட்சத்திற்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்பட்டது. மேலும் அவ்வூராட்சிகளின் தலைவர்களுக்கு ஒரு நற்சான்றிதழும் பதக்கமும் அவர்கள் பெயரில் வழங்கப்பட்டது.

**அட்டவனை –3**

**2008-09 ஆம் ஆண்டிற்கான உத்தமர் காந்தி ஊராட்சி விருது விருதுபெற்ற ஊராட்சிகள்**

| வ எண். | மாவட்டம் | ஊராட்சி |
|---|---|---|
| 1. | சேலம் | கோட்டவரதம்பட்டி |
| 2. | தூத்துக்குடி | திருப்பணிச்செட்டிக்குளம் |
| 3. | விருதுநகர் | வச்சக்காரன்பட்டி |
| 4. | நாமக்கல் | ரெட்டிப்பட்டி |
| 5. | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை |
| 6. | ஈரோடு | பொம்மநாயக்கன்பாளையம் |
| 7. | கடலூர் | ஓரத்தூர் |
| 8. | கோயம்புத்தூர் | குன்னத்தூர் |
| 9. | விழுப்புரம் | சோ.குப்பம் |
| 10. | ,நீலகிரி | பேர்உறட்டி |
| 11. | திருவாரூர் | மேலபெருமலை |
| 12. | பெரம்பலூர் | அத்தியூர் |
| 13. | இராமநாதபுரம் | அரியனேந்தல் |
| 14. | திண்டுக்கல் | கலிக்கம்பட்டி |
| 15. | கிருஷ்ணகிரி | பூனப்பள்ளி |

**சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கான விருது**

- தொழில், சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில், பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2007-08 ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும், இத்தகைய சிறந்த நிறுவனங்களுக்கு விருது வழங்க, அரசாணை எண் 117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் (மாஅதி 2) துறை, நாள் 02.07.2007ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த விருது, ரூ.5 இலட்சம் ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் கொண்டதாகும். ஒவ்வொரு ஆண்டும், 5 சிறந்த வணிக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.
- 2007–08ம் ஆண்டிற்கு சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் விருதுக்காக 5 நிறுவனங்களையும், 2008–09ம் ஆண்டிற்கு 4 நிறுவனங்களையும் தேர்ந்தெடுத்து அரசு ஆணையிட்டது. 19.10.2009 அன்று மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களால் விருது வழங்கப்பட்டது.

### அட்டவணை –4
### 2007-08 மற்றும் 2008-09 ஆண்டிற்கான சமூகப் பொறுப்புணர்வு விருது தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள்

| வ எண். | 2006–07 | வ எண். | 2007-08 |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு செய்தி அச்சுத் தாள் லிமிடெட், காகிதபுரம், கரூர் மாவட்டம். | 1. | சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட், மணலி, சென்னை. |
| 2. | எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம், காரைக்கால், பாண்டிச்சேரி. | 2. | ஸ்டில் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட், சேலம் ஸ்டில் பிளான்ட், சேலம் மாவட்டம். |
| 3. | சீனிவாசன் சர்வீஸஸ் என்டோமென்ட், டி.வி.எஸ் மோட்டார்ஸ் குழுமம், சென்னை. | 3. | ஆர்கிட் கெமிகல்ஸ் மற்றும் பார்மாசூட்டிகல்ஸ்லிமிடெட், நுங்கம்பாக்கம், சென்னை. |
| 4. | செயின்ட் கோபைன் கிளாஸ் இந்தியா லிமிடெட், ஸ்ரீ பெருமந்துார், காஞ்சிபுரம் மாவட்டம். | 4. | ஸ்ரீ ராமலிங்க மில்ஸ் லிமிடெட், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். |
| 5. | சக்தி மசாலா பிரைவேட் லிமிடெட், மாமரத்துப்பாளையம், ஈரோடு மாவட்டம். | | |

• 2009–10 ஆம் ஆண்டிற்கான இவ்விருதிற்காக கீழ்க்கண்ட 5 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்நிறுவனங்களுக்கு சமூகப் பொறுப்புணர்வு விருது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 21.07.2010 அன்று வழங்கப்பட்டது.

**அட்டவணை–5**

**2009–10ஆம் ஆண்டிற்கான சமூகப் பொறுப்புணர்வு விருது**

| வ எண். | தேர்ந்ததெடுக்கப்பட்ட நிறுவனங்கள் |
|---|---|
| 1. | நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், நெய்வேலி, கடலூர் மாவட்டம். |
| 2. | உறூன்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். |
| 3. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். |
| 4. | டைட்டான் இன்டஸ்டிரீஸ் லிமிடெட், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 5. | சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் தனியார் நிறுவனம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம். |

• ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு படிகளை உயர்த்தி வழங்குதல் – அரசாணை எண்.262, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20.12.1997–ன் படி கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு நிரந்தர பயணப்படி வழங்க அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளது. 1999ம் ஆண்டு மேலும் 10 சதவீதம் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. அதன்பின் நிரந்தரப் பயணப்படி திருத்தப்படவில்லை. அரசாணை எண். 569, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 28.9.07ன் படி, ஊரக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கான நிரந்தர பயணப்படியினை அரசு உயர்த்தியுள்ளது. முன்னர் வழங்கப்பட்ட மற்றும் தற்போது உயர்த்தப்பட்ட நிரந்தரப்பயணப்படி விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

## அட்டவணை – 6

### ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான மாதாந்திர நிரந்தர பயணப்படி

| வ எண். | அலுவலகம் /பதவியின் பெயர் | முன்னர் வழங்கப்பட்ட மாதாந்திர நிரந்தர பயணப்படி (ரூ.) | திருத்தப்பட்ட மாதாந்திர நிரந்தர பயணப்படி (ரூ.) |
|---|---|---|---|
| 1 | கிராம ஊராட்சித் தலைவர் | 330 | 500 |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | 550 | 750 |
| 3 | ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் | 220 | 400 |
| 4 | மாவட்ட ஊராட்சித் தலைவர், | 1,100 | 1,500 |
| 5 | மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | 330 | 500 |

- **உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல் –** ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ஊராட்சித் தலைவர்களின் மண்டல மாநாட்டில், ஊராட்சித் தலைவர்கள் அளித்த கோரிக்கைகளின் அடிப்படையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 12,618 ஊராட்சித் தலைவர்களுக்கும் அடையாளஅட்டை வழங்கப்படும் என அறிவித்ததை தொடர்ந்து உடனடியாக அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

- **உள்ளாட்சி அமைப்புகள் தினம் –** ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அதிகபட்ச பொது மக்களின் தொடர்பின் அடிப்படையில் அமைந்ததாகும். எனவே மக்களுக்கும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் இடையேயான தொடர்புகளை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம் ஒளிவுமறைவற்ற மற்றும் வெளிப்படையான உள்ளாட்சிகளின் நிர்வாகத்தை கொண்டுவர இயலும். அதே சமயத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகளை மக்கள் அறிய செய்யவும், திட்டங்கள் அதன் செயலாக்கம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் குறித்த தகவல், கல்வி, மற்றும் தொடர்பு இயக்கங்கள் நடத்தவும் வேண்டியுள்ளது. எனவே ஒரு ஆண்டில் ஒரு குறிப்பிட்ட தினத்தை “உள்ளாட்சிகள் அமைப்புகள் தினம்” என கடைப்பிடிப்பது இவ்வகை நடவடிக்கைகளில் ஒன்றாகும். இவ்வாறு அரசு முடிவு செய்து, ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று “உள்ளாட்சிகள் தினவிழா” கொண்டாடுவதற்கு அரசாணை (ப) எண்.632, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி1) துறை, நாள் 26.10.2007ல் அரசு உத்தரவிடப்பட்டு அதன்படி ஒவ்வொரு ஆண்டும் அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

- **கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் –** கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் திட்டப் பணிகளுக்கான நிதியையும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான தொகையினையும், பணியினை அளவு மற்றும் மேலளவு செய்யாமலும், பட்டியல்களை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அவர்களின் ஒப்புதல் பெறாமலும், காசோலையை அளித்தது பல சந்தர்ப்பங்களில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஊராட்சித் தேர்தலுக்கு முன்னர் அதிக அளவில், அனுமதியின்றி பணம் எடுத்த நிகழ்வுகளும் உள்ளன. எனவே அரசு, கிராம ஊராட்சிக் கணக்குகளை மேலும் முறைப்படுத்தவும் மற்றும் கணக்குகளைப் பராமரிப்பதற்கான வழிமுறைகளை நெறிப்படுத்தவும், அரசாணை எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி4) துறை, நாள் 17.8.2007ஐ வெளியிட்டுள்ளது. மேலும் இதனை இன்னும் நெறிபடுத்திடவும் கணக்குகளை முறைப்படுத்திடவும் அரசாணை நிலை எண்.178, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 25.11.2008 மற்றும் அரசாணை நிலை எண்.180, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 01.12.2008 வெளியிடப்பட்டுள்ளது.

- **நிர்வாக அதிகாரம் –** உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்துதல். உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு வழங்கும் நிர்வாக அனுமதி வரம்பினை உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, கிராம ஊராட்சிகள், பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் ஒரு பணிக்கு ரூபாய் 1 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி ரூபாய் 2 லட்சம் வரை ஒரு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். அதேபோல் ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் ஒரு பணிக்கு ரூபாய் 5 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி, ரூபாய் 10 லட்சம் வரை ஒருபணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். மாவட்ட ஊராட்சி ஒரு பணிக்கு ரூபாய் 10 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி ரூ.20 லட்சம் வரை ஒரு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். பணிகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கு பொறியாளர்களுக்கான அதிகாரத்தினை உயர்த்தவும் மற்றும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளைப் பொறுத்தவரை பொறியியல் பிரிவு அலுவலர்களுக்கான அளவீடு மற்றும் மேல் அளவீடு செய்யும் அதிகாரத்தினை சீரமைக்கவும் இந்த அரசு முடிவு செய்து அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (உ.அ.1) துறை, நாள் 20.12.2007ல் ஆணையிட்டுள்ளது. மேலும் ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வு செய்வதற்கான அதிகார வரம்பினை நிர்ணயம் செய்தும் அரசாணை (நிலை) எண்.204, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(உ.அ.1) துறை, நாள் 24.12.2007ல் அரசு ஆணையிட்டுள்ளது.

- **மாற்றியமைக்கப்பட்ட மாவட்டக் கொள்முதல் குழு மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான பொருள்கள் வாங்குவதற்கான திருத்தியமைக்கப்பட்ட வரையறைகள் –**

  அரசாணை (நிலை) எண்.144, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–3) துறை, நாள் 22.12.2009–ல் குடிநீர் வழங்கல் தொடர்பான பொருள்களின் விலையை நிர்ணயம் செய்வதற்காக ஏற்கனவே இருந்து வந்த மாவட்டக் கொள்முதல் குழுவை மாற்றியமைத்து அரசு பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மாவட்ட ஆட்சித் தலைவர் | – | தலைவர் |
| திட்ட இயக்குநர், மா.ஊ.வ.மு. | – | உபத் தலைவர் |
| உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | – | உறுப்பினர் செயலர் |
| செயற் பொறியாளர் (ஊ.வ) | – | உறுப்பினர் |
| செயற் பொறியாளர் (RWS), த.நா.கு.வ. வாரியம் | – | உறுப்பினர் |
| கணக்கு அலுவலர், மா.ஊ.வ.மு. | – | உறுப்பினர் |

மேலும், இதே அரசாணையில், பல்வேறு குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகளுக்காக ஒப்பந்த விலை கோருவதற்கு பதிலாக, 'நிலையான ஆழ்குழாய் கிணறு (இந்தியா மார்க் –II) கைப்பம்புகள் மற்றும் உதிரி பாகங்கள்' வாங்குவதற்கான ஒப்பந்த விலையை நிர்ணயிப்பதற்காக மட்டும், இந்த கொள்முதல் குழுவால் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. இதர குடிநீர் வழங்கல் தொடர்பான பொருள்களை பொறுத்தவரையில், பொதுப்பணித் துறை அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்கனவே உள்ள விலை விவரங்களையே ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் பின்பற்றலாம். இருந்தபோதிலும், இவ்வகை பணிகள், தற்போதுள்ள ஒப்பந்த புள்ளி கோருவதற்கான நடைமுறைகளை பின்பற்றியோ அல்லது DGS & D விலையின் அடிப்படையிலோ எடுத்துச் செய்யப்பட வேண்டும் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

- **அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி –** கிராம ஊராட்சிகளில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

- **அனைத்து மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு கணினி மற்றும் அச்சுப் பொறி வசதி –** 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஊராட்சிகள் திறமையாகவும் பொறுப்பாகவும் செயல்படுவதை ஊக்குவிக்கும் திட்ட நிதியினைக் கொண்டு, 29 மாவட்ட ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களின் அலுவலக உபயோகத்திற்காக கணினி மற்றும் அச்சுப் பொறிகளை அரசு வழங்கியுள்ளது.

- **அனைத்து மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இன்வெர்ட்டர்கள் –** 2008–09ஆம் ஆண்டிற்கான இத்திட்ட நிதியினைக் கொண்டு, 29 மாவட்ட ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களின் உபயோகத்திற்காக இன்வெர்ட்டர்களை (Invertors) அரசு வழங்கியுள்ளது.

- **ஊராட்சி ஒன்றியங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி –** 2007–09ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டது. 2009–10 ஆம் ஆண்டில், அரசாணை (நிலை) எண்.25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.4) துறை, நாள் 23.03.2010ல் புதியதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.6.92 இலட்சம் மதிப்பீட்டில் கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி வழங்கப்பட்டுள்ளது.

- **உள்ளாட்சி நிறுவன பிரதிநிதிகளின் பதவிக் காலத்தை நிலைப்படுத்துதல் –** அற்பமான மற்றும் ஏற்றுக் கொள்ள இயலாத காரணங்களுக்காக அடிக்கடி கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா தீர்மானங்களினால் ஊரக உள்ளாட்சிகளில் திட்டமிடுதல் மற்றும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துதல் ஆகிய பணிகள் பாதிக்கப்படுகிறது. இது பொது மக்கள் நலனுக்கு பெரிதும் குந்தகம் விளைவிக்கக் கூடியதாக உள்ளது. எனவே, நம்பிக்கையில்லா தீர்மானங்கள் கொண்டுவருதல் மற்றும் நிறைவேற்றுதல் குறித்து 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தொடர்புடைய பிரிவுகளுக்கு திருத்தங்கள் செய்யப்பட்டதுடன், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு உரிய குறைந்தபட்சம் நபர்கள் கூட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று சட்டத்தில் கடுமையாக்கப்பட்டுள்ளது. அதன்படி, கிராம ஊராட்சித் துணைத் தலைவர் அல்லது ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சரிபாதி என்பதை குறைந்தபட்சம் ஐந்தில் மூன்று பங்கு எனவும், தீர்மானத்தை நிறைவேற்ற தற்போது மூன்றில் இரண்டு பங்கு என்பதை ஐந்தில் நான்கு பங்கு எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சட்ட திருத்தப்படி, கிராம ஊராட்சிகளின் துணைத்தலைவர்கள் அல்லது தலைவர்கள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள்ளாகவோ, பதவிக்காலம் முடியும் இறுதி ஆண்டிலோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இயலாது.

- **மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கிராம ஊராட்சிகளுக்கு தனி அலுவலர்களை நியமனம் செய்தல் –** சில குறிப்பிட்ட நிகழ்வுகளில் கிராம ஊராட்சிகளுக்கு தனி அலுவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவும் ஊராட்சி நிர்வாகம் இடையூறின்றி செயல்படவும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில், பிரிவு 9–சி புதிதாக சேர்க்கப்பட்டது. இதன்படி தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்பும் கிராம ஊராட்சியை அமைக்க இயலவில்லை எனில், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அக்கிராம ஊராட்சிக்கு தனி அலுவலரை நியமனம் செய்யலாம்.

- **கிராம ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை செயல்படுத்த கிராம ஊராட்சித் தலைவர்களை பொறுப்பாக்குதல் –** கிராம ஊராட்சிகள் தங்கள் பொது நிதியில் மேற்கொள்ளும் பணிகளுடன் மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றன. இருப்பினும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படும் திட்டங்களை செயல்படுத்தவோ அல்லது மேற்கொள்ளவோ கிராம ஊராட்சி தலைவரைக் கோருவதற்கு 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் திட்டவட்டமான வழிவகை எதுவும் செய்யப்படவில்லை. எனவே சட்டப் பிரிவு 46–ல் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த அல்லது மேற்கொள்ள அக்கிராம ஊராட்சியின் தலைவரைக் கட்டாயப் பொறுப்பாக்கி திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

- **ஊராட்சிகளின் செயல்பாடு குறித்த ஆண்டு அறிக்கை –** மாவட்ட ஊராட்சிகள் தற்போது திட்டமிடுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றில் மட்டுமே தனது பங்கினை ஆற்றி வருகின்றது. ஆனால் வளர்ச்சி திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களாலும், கிராம ஊராட்சிகளாலும் செயல்படுத்தப்படுகிறது. இந்நிலையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும் தங்களது ஆண்டு அறிக்கையினை மட்டுமே சட்டமன்றப் பேரவையின் முன்பு சமர்ப்பிக்கும் முறை இருந்ததால் புதியதாக பிரிவு 166–ஏ சேர்க்கப்பட்டு மூன்றடுக்கு ஊராட்சிகளின் செயல்பாட்டுக்கான ஒட்டுமொத்த அறிக்கையினை 'ஊராட்சிகளின் செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையாக 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன் வைக்க தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்', 1994–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டிற்கான ஊராட்சிகளின் செயல்பாடுகள் குறித்த அறிக்கை பிப்ரவரி, 2009–ல் தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டது. 2008–09ஆம் ஆண்டிற்கான ஊராட்சிகளின் செயல்பாடுகள் குறித்த அறிக்கை சூன், 2009ல் தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன் வைக்கப்பட்டது. 2009–10ஆம் ஆண்டிற்கான இதே போன்ற அறிக்கை ஏப்ரல், 2010–ல் சட்டப்பேரவையில் வைக்கப்பட்டது.

- **அபராதத் தொகைகளை உயர்த்துதல் –** தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பட்டியல் 2–ல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள வழிவகைகளை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய அபராதம் இணைப்பு பட்டியல் 3–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர் மீறுகைகளுக்கு விதிக்கப்படக்கூடிய அபராதமும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அபராதத் தொகைகள் 50 ஆண்டுகளுக்கு முன் வகுக்கப்பட்டதால், அதனுடைய கடுந்தன்மை இழந்துவிட்டது. எனவே, இணைப்பு பட்டியல்கள் 2 மற்றும் 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத் தொகைகள் தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிவகைகளை முறையாக நடைமுறைப்படுத்தி கண்காணிக்கவும், மீறுபவர்களிடமிருந்து அதிகமான அபராதத் தொகையை வசூல் செய்ய ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- **ஊராட்சிகளில் உறுப்பினர்களின் தகுதியின்மை –** மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951–ல் சட்டமன்றங்களின் உறுப்பினர்களுடைய தகுதியின்மையை குறிக்கும் வழிவகைகளைப் போல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவுகள் 34, 35, 37, 38, 39 மற்றும் 41–க்கு திருத்தங்கள் வெளியிட்டுள்ளதன் மூலம், ஊராட்சி உறுப்பினராக இருக்கக்கூடியவரின் தகுதியின்மையை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தை கலந்தாலோசித்தபின் முடிவு செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிரிவு 41–ஏ, 41–பி, 41–சி மற்றும் 41–டி என புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு ஊராட்சி உறுப்பினரின் தகுதியின்மை தொடர்பாக விசாரனை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- **ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு –** மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி 2007–08ம் ஆண்டில் 8 சதவீதத்திலிருந்து 9

சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இது நடப்பு நிதியாண்டில் 2009–2010ல் 9 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி **2006–07**ம் ஆண்டில் ரூ.1,225 கோடியிலிருந்து **2007–08ம்** ஆண்டில் ரூபாய் **1,583.58** கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது 358 கோடி ரூபாய் அதாவது 30 சதவீதம் கூடுதலாகும். 2008–09ம் ஆண்டில் ரூபாய் 1,716.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 133 கோடி ரூபாய் கூடுதலாகும். அதாவது 2007–08 ஆண்டு ஒதுக்கீட்டை விட 8 சதவீதம் கூடுதலாகும். 2009–10ம் ஆண்டிற்கு ரூபாய் 1,926.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ரூபாய் 210.13 கோடி அதாவது 2008–09ம் ஆண்டு ஒதுக்கீட்டை விட 12ரூ கூடுதலாகும். 2010–11 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2,334.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ரூபாய் 407.64 கோடி அதாவது 2009–10ம் ஆண்டு ஒதுக்கீட்டை விட 21ரூ கூடுதலாகும்.

**அட்டவணை – 7**

**ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதிப் பகிர்வு**

| வருடம் | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) | முந்தைய ஆண்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் |
|---|---|---|
| 2006–07 | 1,225.00 | 23 |
| 2007–08 | 1,583.58 | 30 |
| 2008–09 | 1,716.44 | 8 |
| 2009–10 | 1,926.57 | 12 |
| *2010–11 | 2,334.21 | 21 |

*2010-11ம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீட்டின்படி தொகை எடுத்துக்கொள்ளப்பட்டது.

- **ஒப்படைக்கப்பட்ட வருவாய் –** தலவரி, தலமேல் வரி, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் கேளிக்கை வரி இவை மூலமான வருவாய் இதற்கு முன்னர் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாவட்ட அளவில் தொடர்புடைய ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளுக்கு ஈடு செய்யப்பட்டது. இவை உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலையை பலப்படுத்த 2007–08 லிருந்து மாநில அளவில் ஒருமுகப்படுத்தப்பட்டு ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு பிரித்தளிக்கப்படுகிறது. **2007–08ம்** ஆண்டுக்கு ரூபாய் 270 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மூன்றில் இரண்டு பங்கு நிதி (அதாவது ரூ.180 கோடி) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு (அதாவது **ரூ.90 கோடி**) நிதியில், ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மிகவும் பழுதடைந்த **53** ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடங்களுக்குப் பதிலாக புதிய கட்டிடங்கள் ஒப்படைக்கப்பட்ட திட்டக்கூறு

நிதியிலிருந்து கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி திட்டக்கூறு நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்களுக்கு **385** வாகனங்களும் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள உட்கோட்ட உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு **409** வாகனங்களும் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. **2008–09ம்** ஆண்டு ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாயிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை **ரூ.541.77** கோடியில், **ரூ.180.59** கோடி திட்டக்கூறு நிதியாகும். **2009–10** ம் ஆண்டில் ரூ.**359.49** கோடி ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாயின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் **ரூ.179.745** கோடி திட்டக்கூறு நிதியாகும். **2010–11**ம் ஆண்டிற்கு ரூ.**236.38** கோடி ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாயின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மூன்றில் ஒரு பங்கு அதாவது (ரூ. 78.79 கோடி) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மூன்றில் இரண்டு பங்கு அதாவது (ரூ. 157.59 கோடி) அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க முன்னுரிமை திட்டங்களுக்கு அ.ஆ.நிலை எண்.71, ஊ.வ. மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.7.2010ன் குறிப்பிட்டுள்ள வழிகாட்டியின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் கீழுள்ள சிறப்புத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களுக்கு 385 வாகனங்களும், 664 வாகனங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர், செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட உபகோட்டங்களின் உதவி செயற்பொறியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

- குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளை பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவு செய்யும் பொறுப்பு கிராம ஊராட்சிகளைச் சார்ந்தது. ஆனால் பல கிராம ஊராட்சிகள் போதிய நிதி வசதியின்றி அடிப்படை வசதிகளை நிறைவு செய்ய சிரமப்படுவதால், இந்நிலையினை சரிசெய்ய கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :

- 2007–08ம் ஆண்டிலிருந்து மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வில், **கிராம ஊராட்சிகளின் பங்கு 47 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.**

- மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே நிதிப் பங்கீடு செய்யப்படும்போது, பல சிறிய ஊராட்சிகளுக்கு போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையினை மாற்ற மாநில நிதிக் குழு மான்யத்திலிருந்து **அனைத்து ஊராட்சிகளுக்கும் தலா ரூபாய் 3 இலட்சம்** வீதம் சமமாக வழங்கவும், மீதமுள்ள தொகையை மக்கள் தொகை அடிப்படையில் வழங்கவும் ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

- அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் சமச்சீர் நிதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், **2008–09**ம் ஆண்டு முதல் மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து விடுவிக்கப்படும் நிதியில் தலா **ரூ.30** இலட்சம் வீதம் சமமாக வழங்க ஆணை வெளியிடப்பட்டு அதன்படி நிதி விடுவிக்கப்படுகிறது.

- மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பன்னிரெண்டாவது நிதிக் குழு மான்யம் முழுமையையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இது 2006–07ஆம் ஆண்டு இரண்டாவது அரையாண்டு ஒதுக்கீடு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இதே போல், 2010–11ம் ஆண்டிற்கான பதிமூன்றாவது நிதிக் குழு மான்யமும் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## II. ஊரக வளர்ச்சித் திட்டங்கள்

**கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் சாதனைகள் –**

- தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து ஓலை குடிசை வீடுகளையும் கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்ற "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களால் 06.01.2010ல் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் 2010–11 முதல் 2015–16 வரையிலான 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 2016–ஆம் ஆண்டுக்குள் நாட்டிலேயே குடிசைகளற்ற மாநிலமாக தமிழகம் திகழும்.

- கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 3.3.2010 அன்று திருச்சிராப்பள்ளியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

- மக்கள் நலப் பணியாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம ஊராட்சி உதவியாளர் ஆகியோர் அடங்கிய மூன்று நபர் கொண்ட குழு மூலம் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அனைத்து குடிசைகளின் கணக்கெடுப்புப் பணி 29.3.2010ல் தொடங்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் இப்பணியின் மேலாய்வு அலுவலர்களாக செயல்பட்டனர்.

- முதன்மைக் கணக்கெடுப்பு மற்றும் மேலாய்வுப் பணிகளின் முடிவில் கிட்டதட்ட 22 இலட்சம் குடிசைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. கணக்கெடுப்பு செய்யப்பட்ட அனைத்து குடிசைகளும் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கென தேசிய தகவல் மைய அலுவலர்களால் உருவாக்கப்பட்ட இணையதள மென்பொருளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- 15.8.2010 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவின்போது மாவட்டத்திற்கு ஒரு பயனாளி வீதம் அனைத்து மாவட்டங்கள் சேர்ந்த 31 தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு பணி ஆணைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. அதே நாளில் மாவட்டங்களில் 10 தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

- இத்திட்டத்திற்கான முதலாம் ஆண்டில் (2010–11) மொத்தம் தகுதிவாய்ந்த குடிசைகளில் 3 லட்சம் குடிசைகள் நிலையான கான்கிரீட் வீடுகளாக கட்டித்தரப்பட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் (2010–11) தேர்ந்தெடுக்கப்பட்ட 3 இலட்சம் வீடுகளின் பணி முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு –

| வ எண். | மாவட்டத்தின் பெயர் | 2010–11ம் ஆண்டிற்கான மொத்த வீடுகளின் எண்ணிக்கை | அளவு பணிகள் முடிக்கப் பட்டவை | மண் வேலை முடிக்கப் பட்டவை | அஸ்திவார கான்கிரீட் முடிக்கப் பட்டவை | அடித்தளபணி முடிக்கப்பட்டவை | ஜன்னல் மட்டம் முடிக்கப்ப ட்டவை | கூரை மட்டம் முடிக்கப்பட்டவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | காஞ்சிபுரம் | 13512 | 12879 | 12415 | 8675 | 6841 | 883 | 131 |
| 2 | திருவள்ளூர் | 11331 | 10155 | 9421 | 8168 | 6966 | 1871 | 498 |
| 3 | கடலூர் | 26119 | 25110 | 16413 | 12836 | 8885 | 1819 | 390 |
| 4 | விழுப்புரம் | 37793 | 34548 | 29093 | 25016 | 18443 | 6193 | 1775 |
| 5 | வேலூர் | 15479 | 14790 | 12205 | 8586 | 6141 | 1138 | 527 |
| 6 | திருவண்ணாமலை | 17653 | 15899 | 14655 | 11636 | 9165 | 2985 | 862 |
| 7 | சேலம் | 13309 | 10764 | 9173 | 7554 | 5503 | 948 | 151 |
| 8 | நாமக்கல் | 6082 | 4915 | 3056 | 2384 | 1518 | 236 | 30 |
| 9 | தர்மபுரி | 7165 | 6582 | 5636 | 3916 | 2889 | 575 | 169 |
| 10 | கிருஷ்ணகிரி | 5291 | 4567 | 4042 | 3241 | 2798 | 561 | 140 |
| 11 | ஈரோடு | 4967 | 4161 | 2803 | 2421 | 1967 | 533 | 61 |
| 12 | கோயம்புத்தூர் | 2949 | 2726 | 2357 | 1898 | 1344 | 115 | 15 |
| 13 | திருப்பூர் | 3174 | 2593 | 2176 | 1688 | 1357 | 194 | 29 |
| 14 | நீலகிரி | 265 | 200 | 176 | 121 | 83 | 17 | 13 |
| 15 | தஞ்சாவூர் | 16690 | 14962 | 10964 | 7628 | 3999 | 444 | 56 |
| 16 | நாகப்பட்டினம் | 16193 | 15937 | 8451 | 4268 | 3023 | 837 | 166 |
| 17 | திருவாரூர் | 12544 | 11733 | 9166 | 5876 | 3198 | 1029 | 145 |
| 18 | திருச்சி | 8447 | 7091 | 6563 | 5821 | 3970 | 506 | 71 |
| 19 | கரூர் | 8859 | 7087 | 5329 | 3388 | 1915 | 334 | 108 |
| 20 | பெரம்பலூர் | 3457 | 2039 | 1483 | 1227 | 772 | 68 | 6 |
| 21 | அரியலூர் | 8515 | 7954 | 5650 | 3756 | 2348 | 451 | 37 |
| 22 | புதுக்கோட்டை | 9994 | 9067 | 7521 | 4556 | 3802 | 564 | 51 |
| 23 | மதுரை | 8762 | 6281 | 5108 | 4221 | 3318 | 615 | 128 |
| 24 | தேனி | 1063 | 954 | 926 | 895 | 891 | 411 | 147 |
| 25 | திண்டுக்கல் | 13343 | 11923 | 7782 | 5254 | 4254 | 642 | 63 |
| 26 | இராமநாதபுரம் | 10381 | 10351 | 6038 | 4578 | 3641 | 528 | 39 |
| 27 | விருதுநகர் | 1394 | 1199 | 1129 | 851 | 699 | 269 | 61 |
| 28 | சிவகங்கை | 8364 | 7748 | 5856 | 3790 | 2691 | 553 | 52 |
| 29 | திருநெல்வேலி | 2345 | 2011 | 1456 | 1294 | 1161 | 348 | 79 |
| 30 | தூத்துக்குடி | 3021 | 2742 | 2013 | 1414 | 1192 | 347 | 63 |
| 31 | கன்னியாகுமரி | 1539 | 1264 | 1161 | 1094 | 1060 | 584 | 284 |
| | **மொத்தம்** | **300000** | **270232** | **207492** | **158051** | **115606** | **26598** | **6347** |

- கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் காலாண்டு தவணையாக ரூ.562.50 கோடி அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கும் விடுவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் மூலம் ரூ.294.45 கோடி கிராம ஊராட்சிகளுக்கும் விடுவிக்கப்பட்டுள்ளது. ரூ.54.53 கோடி சிமெண்ட்டுக்கும், ரூ.20.36 கோடி இரும்புக் கம்பிகளுக்கும் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.33.53 கோடி கிராம ஊராட்சிகள் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- **அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஜனவரி 2007ம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட **அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமே** தற்போது செயல்படுத்தப்படும் மாநில அரசுத் திட்டங்களில், மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் குளம், நூலகம், விளையாட்டு மையம், சுடுகாடு/இடுகாடு, குடிநீர்த் திட்டப் பணிகள் ஆகிய கட்டாய பணிகளும், தெரு விளக்குகள், மீன்வளர்ப்பு குளங்கள், சிமென்ட் சாலைகள், கிராமச்சந்தைகள் ஆகியப் பணிகள் உள்ளூர் தேவையின் அடிப்படையிலும் எடுக்கப்படுகின்றன.

**அட்டவணை–8**

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒதுக்கீடு மற்றும் செலவினம்**

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | கிராம ஊராட்சிகளி எண்ணிக்கை | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| 2006–07 | 2,540 | 513.08 | 484.15 |
| 2007–08 | 2,534 | 511.87 | 474.24 |
| 2008–09 | 2,520 | 509.04 | 461.63 |
| 2009–10 | 2,510 | 507.02 | 469.87 |
| 2010–11 | 2,514 | 507.83 | 257.19 |

## அட்டவணை–9

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – முன்னேற்றம் ஆண்டு வாரியாக

## 2006–2009

| வ. எண். | பணிகளின் விவரம் | 2006–07 | | 2007-08 | | 2008-09 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் |
| 1. | குளங்கள் | 2,599 | 2,599 | 2,546 | 2,546 | 2,520 | 2,520 |
| 2. | சுடுகாடு/ இடுகாடு | 4,482 | 4,482 | 3,850 | 3,850 | 3,531 | 3,531 |
| 3. | விளையாட்டு மையங்கள் | 2,540 | 2,540 | 2,534 | 2,534 | 2,520 | 2,520 |
| 4. | நூலகங்கள் | 2,540 | 2,540 | 2,534 | 2,534 | 2,520 | 2,520 |
| 5. | குடிநீர் பணிகள் | 8,576 | 8,576 | 7,265 | 7,265 | 5,693 | 5,693 |
| 6. | சிமெண்ட் சாலைகள் எண்/நீளம் கி.மீ. | 9,972 / 1,339.39 | 9,972 / 1,339.39 | 8,158 / 842.30 | 8,158 / 842.30 | 5,519/ 720.77 | 5,519/ 720.77 |
| 7. | உள்நாட்டு மீன்வளம் | 1,031 | 1,031 | 1,097 | 1,097 | 908 | 908 |
| 8. | கிராமச் சந்தைகள் | 122 | 122 | 46 | 46 | 32 | 32 |
| 9. | தெரு விளக்குகள் | 33,186 | 33,186 | 29,316 | 29,316 | 24,432 | 24,432 |
| 10. | இதரப் பணிகள் | 7,691 | 7,691 | 6,712 | 6,712 | 4,713 | 4,713 |
| | **மொத்தம்** | **72,739** | **72,739** | **64,058** | **64,058** | **52,388** | **52,388** |

## அட்டவணை –10

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –2009–10ல் முன்னேற்றம்

| வ. எண். | பணிகளின் விவரம் | 2009–10 | |
|---|---|---|---|
| | | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் |
| 1. | குளங்கள் | 2,510 | 2,510 |
| 2. | சுடுகாடு / இடுகாடு | 3,531 | 3,531 |
| 3. | விளையாட்டு மையங்கள் | 2,510 | 2,510 |
| 4. | நூலகங்கள் | 2,510 | 2,510 |
| 5. | குடிநீர் பணிகள் | 4,820 | 4,820 |
| 6. | சிமெண்ட் சாலைகள் எண்/நீளம் கி.மீ. | 4,244 / 516.17 | 4,238 / 513.12 |
| 7. | உள்நாட்டு மீன்வளம் | 666 | 606 |
| 8. | கிராமச் சந்தைகள் | 14 | 14 |
| 9. | தெரு விளக்குகள் | 20,657 | 20,657 |
| 10. | இதரப் பணிகள் | 4,501 | 4,501 |
| | **மொத்தம்** | **45,897** | **45,897** |

## அட்டவணை –11

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –2010–11ல் முன்னேற்றம்

| வ. எண். | பணிகளின் விவரம் | 2010–11 | |
|---|---|---|---|
| | | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் |
| 1. | குளங்கள் | 2,514 | 1,729 |
| 2. | சுடுகாடு / இடுகாடு | 3,326 | 2,025 |
| 3. | விளையாட்டு மையங்கள் | 2,514 | 950 |
| 4. | நூலகங்கள் | 2,514 | 1,094 |
| 5. | குடிநீர் பணிகள் | 4,462 | 3,912 |
| 6. | சிமெண்ட் சாலைகள் எண் / நீளம் கி.மீ. | 3,781 /514.57 | 3,523/405.69 |
| 7. | உள்நாட்டு மீன்வளம் | 622 | 82 |
| 8. | கிராமச் சந்தைகள் | 12 | 5 |
| 9. | தெரு விளக்குகள் | 2,222 | 1,019 |
| 10. | இதரப் பணிகள் | 4,990 | 3,337 |

மேலும், இதர துறைகளில் குறிப்பாக வேளாண் துறை, கல்வித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, முதலிய பிற துறை திட்டங்களின் நிதி ஆதாரங்களை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இதர திட்டங்களுடன் இயன்றளவு ஒருங்கிணைத்து, ஒவ்வொரு ஆண்டும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

## அட்டவணை – 12

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – ஒருங்கிணைக்கப்பட்ட நிதி மற்றும் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம் – ஆண்டு வாரியாக (2006–07 முதல் 2009–10 வரை)

**(ரூபாய் லட்சத்தில்)**

| வருடம் | பணிகளின் எண்ணிக்கை | பணிகளின் மதிப்பீடு தொகை | ஒரு அகிஅமதி கிராமத்திற்கான சராசரி |
|---|---|---|---|
| 2006–07 | 7,80,805 | 2,13,725.38 | 84.14 |
| 2007–08 | 7,43,087 | 2,22,891.34 | 87.96 |
| 2008–09 | 5,19,385 | 2,63,314.14 | 104.49 |
| 2009–10 | 5,23,356 | 2,83,354.87 | 110.89 |
| 2010–11 | 5,53,687 | 2,91,334.00 | 115.88 |

- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – தமிழ்நாடு –** இத்திட்டம் **2.2.2006 முதல்** கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட்டது. **1.4.2007** முதல் இத்திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்டமாக விரிவுபடுத்தப்பட்டது. **1.4.2008** முதல் இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள இதர அனைத்து **20** மாவட்டங்களில், அதாவது காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மூன்றாம் கட்டமாக விரிவுபடுத்தப்பட்டது.

**அட்டவணை–13**


**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நிதி விடுவிக்கப்பட்டது மற்றும் செலவினம் – ஆண்டு வாரியாக**

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | மத்திய அரசு | மாநில அரசு | மொத்தம் | செலவினம் |
|---|---|---|---|---|
| 2005–06 | 65.72 | 7.31 | 73.03 | 3.00 |
| 2006–07 | 170.89 | 18.08 | 188.97 | 151.64 |
| 2007–08 | 516.29 | 57.29 | 573.58 | 516.42 |
| 2008–09 | 1,401.26 | 191.98 | 1,593.24 | 1,005.15 |
| 2009–10 | 1,371.19 | 231.28 | 1,602.47 | 1,676.37 |
| 2010–11 | 775.09 | 187.5 | 962.59 | 1,526.957 |
| **மொத்தம்** | **4,300.45** | **693.43** | **4,993.88** | **4,879.537** |

**மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் செய்யப்பட்ட மொத்த செலவினம் (மே 2006 முதல் செப்டம்பர் 2010வரை)**

**(ரூபாய் கோடியில்)**




- பிப்ரவரி 2006ல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 13.05.2006 வரையில் **3 கோடி ரூபாயாக** இருந்த செலவினம், ஜனவரி 2007ல் ரூபாய் **111** கோடியாகவும், தற்போது **ரூபாய் 4,879.537 கோடிக்கு மேலாகவும்** உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் **60.568 கோடி** மனித நாட்கள் உருவாக்கப்பட்டு, **66,636** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெறுவோரில், **76** சதவீதம் பெண்கள் ஆவர். மேலும், **56** சதவீதத்தினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களை சார்ந்த பயனாளிகள் ஆவார்கள். ஊரகப் பகுதிகளில் பெண் தொழிலாளர்களுக்கான ஊதியம் கணிசமாக உயர்ந்துள்ளது. தேசிய அளவில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தியதில் சிறந்த **22** மாவட்டங்களில் கடலூர், சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் இடம் பெற்று **2.2.2009** அன்று புது டில்லியில் **2007–08**ம் ஆண்டிற்கான விருதைப் பெற்றுள்ளன. நாகப்பட்டிணம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைப் போன்று **26** மாவட்டங்கள் தேசிய அளவில் **2008–09**ம் ஆண்டிற்கான விருதினை **2.2.2010** அன்று புது டில்லியில் பெற்றுள்ளன. இத்திட்ட செயல்பாட்டிற்கென புதிய பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## அட்டவணை 14

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – பணிகள் விரைந்து முடிக்க பதவிகள் அனுமதித்தது

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **மாநில அளவில்** | |
| 1. | கூடுதல் இயக்குநர் | 1 |
| 2. | செயற் பொறியாளர் | 1 |
| 3. | உதவி இயக்குநர்கள் | 2 |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 5 | உதவியாளர்கள் | 2 |
| 6. | தகவல் மேலாண்மை சிறப்பு அலுவலர்கள் | 2 |
| | **மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை** | |
| 7 | கண்காணிப்பாளர்கள் ( வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில்) | 62 |
| 8 | உதவியாளர்கள் | 62 |
| 9. | இளநிலை உதவியாளர்கள் | 31 |
| 10 | கணினி உதவியாளர்கள் | 124 |
| | **வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்** | |
| 11 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | 770 |
| 12 | உதவியாளர்கள் | 770 |
| 13 | கணினி உதவியாளர்கள் | 1,665 |
| | **தொழில் நுட்ப பணியிடங்கள்** | |
| 14 | உதவி செயற்பொறியாளர்கள் | 33 |
| 15 | உதவிப் பொறியாளர்கள் | 248 |
| 16 | பணி மேற்பார்வையாளர்கள் | 1291 |
| 17 | இளநிலை வரைவு அலுவலர்கள் | 33 |

• மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை முறையாகவும், விரைவாகவும் செயல்படுத்துவதற்கு கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. இத்திட்டத்திற்கென தனியான ஊரக விலைப் பட்டியல்கள் 2006–07 முதல் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டுள்ளன. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (ஜே.1) துறை, அரசாணை 2 (D) எண்.88, நாள்.01.10.2009–ன்படி குறைந்தபட்ச கூலித் தொகை ரூ.80/–லிருந்து ரூ.100/– ஆக 01.01.2010–லிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அரசாணை எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.23.12.2009–ன்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளுக்கென ஊரக விலைப் பட்டியல் ரூ.100/– ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது ஒரு பணியாளர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பொது பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தின் படி 50 சதவிகிதம் பணியை விட குறைவாகவே ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் ஊரகப் பகுதியில் அடர்ந்த புதர்கள் மற்றும் வனப்பகுதிகளை சீரமைக்க தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியமானது 100 சதவிகிதம் பொதுப் பணித்துறையால் வழங்கப்படுகின்ற ஊதியத்தை விட அதிகமானது. அதாவது இவ்வுயர்வானது 150 விழுக்காடு அதிகமாகும்.

2. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்த அளவு 30 சதவீதம் குடும்பங்களை பதிவு செய்திட வலியுறுத்தப்பட்டது. முதல் மற்றும் இரண்டாவது கட்ட மாவட்டங்களில் சராசரி பதிவுகள் 74 சதவிகிதத்திற்கும் மேற்பட்டுள்ளது. மூன்றாவது கட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களிலும் பதிவுகள் 58 சதவிகிதத்தை கடந்துள்ளது. இது இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு பரவலாக உள்ளது என்பதை தெளிவாக்குகிறது. மொத்தத்தில் 64 விழுக்காடு பதிவாகியுள்ளது.

3. ஏற்கனவே நடைமுறையில் இருந்த வேலை அடையாள அட்டை மற்றும் தினக்கூலி பணியாளர்கள் வருகைப் பட்டியல், ஆகிய ஆவணங்கள் தெள்ளத் தெளிவாகவும் கூடுதல் விவரங்களுடனும், இத்திட்டம் செயல்படுத்தும்போது விவரங்களை மாற்ற இயலாத வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

4. இத்திட்ட செயல்பாட்டினை முனைப்போடு கண்காணிக்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய வாகனத்திற்கும் கூடுதலாக மாதம் 50 லிட்டர் எரிபொருள் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) வாகனத்திற்கும் கூடுதலாக 75 லிட்டர் எரிபொருள் அனுமதி அளித்து அரசாணை எண்.27 ஊ.வ மற்றும் ஊ (மஅதி.1) துறை நாள் : 20.2.2008ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

5. கிராம ஊராட்சி அளவில் இத்திட்டத்தை முறையாக செயல்படுத்துவதற்கு மக்கள் நலப் பணியாளர்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

6. இத்திட்டம் முறையான செயல்பாட்டினை உறுதிசெய்யவும், உன்னிப்பாக கண்காணிக்கவும், கிராம ஊராட்சி, வட்டாரம், கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் கூடுதலாக அமைச்சு பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் கணினி உதவியாளர்களை அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள இதர 20 மாவட்டங்களுக்கு மூன்றாம்

கட்டமாக 1.4.2008 முதல் விரிவுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை எண்.27, ஊ.வ (ம) ஊ (மஅதி–1) துறை நாள் 20.2.08ல் கூடுதல் நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் வட்டார வாகனங்களுக்கு கூடுதல் எரிபொருள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

7. தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தில், இத்திட்டப்பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளதால், அவர்கள் நுழைவதை தடுத்திட 100 சதவீதம் முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

8. இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் பணிகள் **ரூ.3.00 இலட்சம்** மதிப்பீட்டிற்கு குறையாமல் உள்ள பெரிய பணிகளாக இருக்க வேண்டுமென பின்வரும் காரணங்களுக்காக வலியுறுத்தப்படுகிறது. அ) ஒரே இடத்தில் போதுமான எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு. ஆ) உருவாக்கப்படும் சொத்துக்கள் கண்களுக்கு புலப்படுகின்றதாகவும், நிலைத்திருக்கக் கூடியதாகவும், சமுதாயத்திற்கு பயன்தரத் தக்கதாகவும் இருத்தல். இ) பரவலாக சிறிய பணிகளுக்கு நிதி ஆதாரங்கள் வீணாக்குவதை தவிர்த்தல். ஈ) பணிகளை நெருக்கமாக கண்காணித்தல் மூலம் முறையற்ற செலவினங்களை குறைத்தல்.

9. இத்திட்டத்தின் கீழ் பணிகளில் ஈடுபடும் வேலையாட்களுக்கு ஊதியம் வெளிப்படையாகவும் நியாயமாகவும் வழங்க தினக் கூலியானது, குழுவில் இடம் பெற்றுள்ள கீழ்க்காணும் குறைந்தபட்சம் 4 நபர்களின் முன்னிலையில் வழங்கப்படல் வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

அ) கிராம ஊராட்சித் தலைவர்,

ஆ) கிராம ஊராட்சி துணைத் தலைவர்,

இ) வேலை நடைபெறும் பகுதியின் வார்டு உறுப்பினர்,

ஈ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வார்டு உறுப்பினர் (வரிசை எண். அ, ஆ மற்றும் இ–ல் குறிப்பிட்டுள்ள நபர்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்த நபர் இல்லாதிருப்பின்)

உ) தரம் பிரிக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களிலிருந்து இரண்டு ஊக்குநர்கள்,

ஊ ) ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்பின் பிரதிநிதி.

10. **தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்** செயல்படுத்தும் அனைத்து மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், இத்திட்டம் வெளிப்படையாக செயலாக்கத்தினை உறுதி செய்யும் பொருட்டு, ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய தினங்களில் நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தினை சமூக தணிக்கை செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 2008–09 2009–10 மற்றும் 2010–11 ஆம் ஆண்டில் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறும் போது இத்திட்டத்திற்கான சமூகத் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செம்மையான சமூகத் தணிக்கையை மேற்கொள்வதற்காக ஜனவரி 2010ல் நடைபெற்ற கிராம சபையில் தொடர்புடைய கிராம ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்களில் 6 உறுப்பினர்கள் அடங்கிய சமூக தணிக்கைக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டத்தைச் சேர்ந்த சமுதாய வள பயிற்றுனர்கள் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் மூலமாக தக்க பயிற்சிகள் வழங்கப்பட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிகள் எடுக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் அனைத்து மாவட்டங்களிலும் சமூக தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு முழுமையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமூக தணிக்கை குழு உறுப்பினர்கள், தாங்களாகவே தொடர்புடைய ஆவணங்களை பரிசீலித்து சமூக தணிக்கை மேற்கொள்ளும் தகுதி பெற்றுள்ளனர்.

- **பெரியார் நினைவு சமத்துவபுரம் –** சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும் மக்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களின் செய்தியை பரப்பவும், இந்த அரசு 1997–98 ஆம் ஆண்டு முதல் 145 சமத்துவபுரங்களை அமைத்துள்ளது. மக்கள் ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்துடனும் ஒருமித்து வாழ்கின்ற வகையில் இத்திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி, புதிதாக 95 சமத்துவபுரங்கள் அமைக்க அரசு முடிவு செய்தது. மேலும், புதிதாக கட்டப்படும் 95 சமத்துவபுரங்கள் மற்றும் ஏற்கனவே கட்டப்பட்ட 145 சமத்துவபுரங்களின் நுழைவாயிலிலும் தந்தை பெரியாரின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 2008–09 ஆம் ஆண்டில் 29 சமத்துவபுரங்கள் (நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக) அமைக்கப்பட்டன. ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 100 வீடுகள் மற்றும் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் தேவையின் அடிப்படையில் பொது விநியோகக் கடையும் அமைக்கப்பட்டுள்ளது.

- இதற்கான செலவினம் முழுவதும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. 29 சமத்துவபுரங்களும் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் / மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தந்தை பெரியாரின் திருவுருவச் சிலை 29 சமத்துவபுரங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே கட்டப்பட்ட 145 சமத்துவபுரங்களில், இதுவரை 122 சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

- 2009–10 ஆம் ஆண்டில் 30 சமத்துவபுரங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில், இதுவரை 5 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் 6 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 17 சமத்துவபுரங்கள் அக்டோபர் 2010லும், 2 சமத்துவபுரங்கள் டிசம்பர் 2010லும் முடிவடையும்.

- 2010–11ம் ஆண்டில் 36 சமத்துவபுரங்கள் அமைக்க ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 29 மாவட்டங்களில் 36 சமத்துவபுரங்கள் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதில் கடலூர், விழுப்புரம், வேலூார், புதுக்கோட்டை, விருதுநகர், மதுரை,

திருநெல்வேலி ஆகிய 7 மாவட்டங்களில் 2 சமத்துவபுரங்கள் அமைக்கப்படவுள்ளது. 36 சமத்துவபுரங்களில் பல்வேறு நிலையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

**இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் –** இத்திட்டத்தின் கீழ் புதிய வீடுகளுக்கான கட்டுமானச் செலவுகள் அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, இவ்வீடுகளுக்கான மதிப்பீடு கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது,. இவ்வீடுகளுக்கான மதிப்பீட்டை, வீடு ஒன்றுக்கு **ரூ.35,000–லிருந்து ரூ.45,000/–** ஆக மைய அரசு அதன் **2010–11–**ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் உயர்த்தியுள்ளது. இதைபோல, **கான்கிரீட் கூரை அமைப்பதற்கான** செலவினங்களில் ஏற்பட்டுள்ள உயர்வையும் கருத்தில் கொண்டு, **மாநில அரசும் கான்கீரிட் கூரை அமைக்க வழங்கும் மானியத்தை 2010–11ம் ஆண்டிலிருந்து ஒரு வீட்டிற்கு ரூ.20,000/–லிருந்து ரூ.30,000/–ஆக உயர்த்தி** வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தில் மாநில அரசின் பங்குத் தொகை தவிர கூடுதலாக கான்கீரிட் கூரை அமைப்பதற்காக இந்த ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

**அட்டவணை – 15**

**இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் – ஆண்டு வாரியாக**

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | ஒதுக்கீடு (கான்கிரிட் கூரை உட்பட) | செலவினத் தொகை | செலவினத்தின் சதவிகிதம் | எடுக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முடிக்கப்பட்டதின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 | 189.79 | 189.79 | 100 | 50,380 | 50,380 | 100 |
| 2007–08 | 255.38 | 255.38 | 100 | 68,523 | 68,523 | 100 |
| 2008–09<br>இயற்கை இடர்பாடுகள் | 379.33<br>6.62 | 379.33<br>6.62 | 100<br>100 | 68,509<br>1,186 | 68,509<br>1,186 | 100<br>100 |
| 2009–10 | 743.65 | 743.65 | 100 | 1,34,014 | 1,34,014 | 100 |
| *2010–11 | 772.04 | 55.62 | 7 | 1,02,939 | – | |

* பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

## அட்டவணை–16
## கச்சா வீடுகள் மேம்பாடு – ஆண்டு வாரியாக

(ரூபாய் கோடியில்)

| வருடம் | ஒதுக்கீடு | செலவினத் தொகை | செலவினத்தின் சதவிகிதம் | எடுக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முடிக்கப்பட்டதின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 | 14.47 | 14.47 | 100 | 11,077 | 11,077 | 100 |
| 2007–08 | 19.23 | 19.23 | 100 | 15,384 | 15,384 | 100 |
| 2008–09 | 29.92 | 26.92 | 100 | 17,951 | 17,951 | 100 |
| 2009–10 | 52.60 | 51.60 | 100 | 35,069 | 34,069 | 100 |

- **ஊராட்சி ஒன்றியப் பள்ளி சீரமைப்புத் திட்டம் –** 2007– 08 முதல் இவ்வரசால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக இம்மாநிலத்தில் பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையிலிருந்த சுமார் **22,000** ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் மற்றும் **4,500** நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. **2007–08**ம் ஆண்டில், **ரூ.104.25** கோடி மதிப்பீட்டில் சுமார் **9,547** பள்ளிகள் பராமரிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. **2008–2009**ம் ஆண்டில் **ரூ.69.30** கோடி மதிப்பீட்டில், **4,432** பள்ளிக் கட்டடங்கள் சீரமைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், **ரூ.14.34** கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் உள்ள **495** ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும், மூன்றாம் நிலை நகராட்சிகளிலும் இத்திட்டத்தின் கீழ் சீரமைப்பதற்காகவும் அவற்றில் **248** கழிப்பறைகள் கட்டுவதற்கும் இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. **2009–10**ம் ஆண்டில் ரூ. **67.56** கோடி மதிப்பீட்டில் **4,124** பள்ளிக் கட்டிடங்கள் இத்திட்டத்தின் கீழ் சீரமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பேரூராட்சிகளிலும் **3–**ம் நிலை நகராட்சிகளிலும் உள்ள **445** ஊராட்சிஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுடன் **168** கழிப்பறைகளும் ரூ.**10.62** கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. **2010–11**ம் ஆண்டில், **85** கோடி மதிப்பீட்டில் **6,051** பள்ளிக் கட்டிடங்கள் இத்திட்டத்தின் கீழ் சீரமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. **2010–11** ஆம் ஆண்டில் **85** கோடி மதிப்பீட்டில் **6,051** பள்ளிக் கட்டிடங்கள் இத்திட்டத்தின் கீழ் சீரமைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

## அட்டவணை–17
## ஊராட்சி ஒன்றியப் பள்ளி சீரமைப்புத் திட்டம்– ஆண்டு வாரியாக

(ரூபாய் கோடியில்)

| வருடம் | ஒதுக்கீடு | செலவினத் தொகை | செலவின த்தின் சதவிகிதம் | எடுக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முடிக்கப்பட் டதின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 & 2007–08 | 104.25 | 95.88 | 92 | 9,547 | 9,547 | 100 |
| 2008–09 | 69.30 | 65.89 | 95 | 4,432 | 4,432 | 100 |
| 2009–10 | 67.56 | 58.20 | 77 | 4,124 | 3,686 | 89 |
| 2010–11 | 85.00 | 18.52 | 22 | 5913 | 1741 | 29 |

**நமக்கு நாமே திட்டம் – 2007–08ம்** ஆண்டு முதல் நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. வளர்ச்சிப் பணிகளில் பொது மக்களின் பங்களிப்போடு, திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் சமுதாய சொத்துக்களை பராமரித்தல் போன்ற பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 2009–10 ம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படுத்தப் படுகிறது.

## அட்டவணை– 18
## நமக்கு நாமே திட்டம் – ஆண்டு வாரியாக

(ரூபாய் கோடியில்)

| வருடம் | ஒதுக்கீடு | மக்களின் பங்களிப்பு | செலவினத் தொகை | செலவின த்தின் சதவிகிதம் | எடுக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முடிக்கப்பட் டதின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2007–08 | 50.00 | 24.01 | 73.11 | 99 | 1,891 | 1,890 | 100 |
| 2008–09 | 50.00 | 30.86 | 80.11 | 99 | 2,578 | 2,576 | 99 |
| 2009–10 | 50.00 | 28.07 | 68.82 | 88 | 2,210 | 2,142 | 97 |
| 2010–11 | 50.00 | 23.48 | 17.47 | 24 | 1,453 | 646 | 44 |

**ஊரக கட்டமைப்பு திட்டம் – 1.4.2008** முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்பு திட்டம் மத்திய அரசால் கைவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சிறு கட்டிடங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு தற்போது சரியான திட்டம் ஏதும் இல்லை. மேலும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துவதும், அவைகளை நீடித்து நிலைத்திருக்க கூடியதாக மாற்றுவதும் அவசியமாகிறது. எனவே **2008–09**ம் ஆண்டு ஊரக கட்டமைப்பு திட்டம் என்ற புதிய திட்டம் **ரூ.350.00** கோடி நிதி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதி, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்காக ஒதுக்கப்படும் மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து, **4:2:1** என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி ஒதுக்கீட்டு தொகை **ரூ. 350** கோடியில், பிப்ரவரி **2010** முடிய **ரூ.350 கோடி** மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை **33,533** பணிகள் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. **2009–10**ம் ஆண்டில் இதுவரை ரூபாய் **380** கோடி விடுவிக்கப்பட்டு, **40,284** பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு **34,325** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. **2010–11**ம் ஆண்டிற்கு ரூபாய் **380** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, **47,478** பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு **8,669** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை– 19**

**ஊரகக் கட்டமைப்பு திட்டம்–பணிகள் வாரியான முன்னேற்றம் 2008-09**

| பணியின் பெயர் | எடுக்கப்பட்டது | முடிக்கப்பட்டது |
|---|---|---|
| சிமெண்ட் சாலை எண்ணிக்கை / கி.மீ | 20,442/1,593.89 | 20,442/1,593.89 |
| தார்ச்சாலை | 1,826/516.80 | 1,826/516.80 |
| மயான கூடம் | 308 | 308 |
| தெரு விளக்குகள் | 2,536 | 2,536 |
| கட்டிடப் பணிகள் | 958 | 958 |
| இதர பணிகள் | 7,463 | 7,463 |
| **மொத்தம்** | **33,533** | **33,533** |

## அட்டவணை –20

### ஊரகக் கட்டமைப்பு திட்டம் பணிகள் வாரியான முன்னேற்றம் –2009–10

| பணியின் பெயர் | எடுக்கப்பட்டது | முடிக்கப்பட்டது |
|---|---|---|
| சிமெண்ட் சாலை எண்ணிக்கை / கி.மீ | 8,189/486.17 | 8,056/471.39 |
| தார்ச்சாலை | 1,508/385.11 | 1,217/286.67 |
| மயான கூடம் | 824 | 539 |
| தெரு விளக்குகள் | 3,105 | 2,911 |
| கட்டிடப் பணிகள் | 4,040 | 1,516 |
| இதர பணிகள் | 22,618 | 2,00,86 |
| சிறுபாசன குளங்கள் பராமரிப்பு பணிகள் | 2,371 | 2,366 |
| மகாத்மா காந்தி தேசீய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளை ஸ்திரப்படுத்துதல் | 10,132 | 10,122 |
| **மொத்தம்** | **51,460** | **34,325** |

### அட்டவணை –21

### ஊரகக் கட்டமைப்பு திட்டம் பணிகள் வாரியான முன்னேற்றம் –2010–11

| பணியின் பெயர் | எடுக்கப்பட்டது | முடிக்கப்பட்டது |
|---|---|---|
| சிமெண்ட் சாலை எண்ணிக்கை / கி.மீ | 6,832/362.41 | 2,428/156.52 |
| தார்ச்சாலை | 2,214/523.21 | 175/54.34 |
| மயான கூடம் | 961 | 24 |
| தெரு விளக்குகள் | 897 | 102 |
| கட்டிடப் பணிகள் | 1,447 | 10 |
| இதர பணிகள் | 21,151 | 4,152 |
| சிறுபாசன குளங்கள் பராமரிப்பு பணிகள் | 1,905 | 123 |
| மகாத்மா காந்தி தேசீய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளை ஸ்திரப்படுத்துதல் | 12,071 | 1,655 |
| **மொத்தம்** | **47,478** | **8,669** |

- **சாலைகள் – 13.05.2006க்குப்** பிறகு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XII & XIII, XIV , XV மற்றும் 12வது நிதிக்குழு மானியத்தின் கீழ், **3,065.197** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **22,113.05** கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் 2008–09ம் ஆண்டு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் பகுதி–7 ல் **ரூ.859 கோடி** மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட **3,032 கி.மீ.** நீளமுள்ள சாலைப் பணிகளும் அடங்கும்.

## அட்டவணை – 22

### சாலைப் பணிகள் – திட்டப் பணிகள் வாரியாக முன்னேற்றம்

| வ. எண். | திட்டம் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | எடுக்கப்பட்டவை | | முடிக்கப்பட்டவை | |
|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | கி.மீ. | எண்ணிக்கை | கி.மீ. |
| 1. | பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் பகுதி V | 170.84 | 365 | 799.69 | 364 | 794.992 |
| 2. | பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் பகுதி VI | 465.63 | 818 | 2,082.54 | 650 | 1,339.96 |
| 3. | பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் பகுதி VII | 859.00 | 1,591 | 3,031.09 | 227 | 325.59 |
| 4. | நபார்டு XII | 124.81 | 854 | 1,486.30 | 854 | 1,486.30 |
| 5. | நபார்டு XIII | 437.89 | 1,403 | 3,631.95 | 1,403 | 3,631.95 |
| 6. | நபார்டு XIV | 379.1772 | 1,075 | 2,691.76 | 1.065 | 2,657.79 |
| 7. | நபார்டு XV | 200.09 | 517 | 1,495.57 | 165 | 416.54 |
| 8. | நபார்டு XV I | 199.98 | 508 | 1411.96 | –– | –– |
| 9. | 12–வது நிதிக் குழு மானியம் 2006–07 | 103.60 | 1,462 | 1,897.35 | 1,462 | 1,897.35 |
| 10 | 12–வது நிதிக் குழு மானியம் (2007–08) | 103.60 | 1,460 | 1,801.16 | 1,460 | 1,801.16 |
| 11. | 12–வது நிதிக் குழு மானியம் 2008–09 | 103.60 | 1,096 | 1,464.81 | 1,096 | 1,464.81 |
| 12. | 12–வது நிதிக் குழு மானியம் 2009–10 | 103.60 | 1,185 | 1,727.04 | 1,185 | 1,727.04 |

- **சிமெண்ட்:** ஊரக வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த சிமெண்ட் இன்றியமையாததாகும். ஆனால் 2007–08ல் ஏற்பட்ட சிமெண்ட் பற்றாக்குறையினால், ஊரக வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுட்துவதில் மிகவும் பாதிக்கப்பட்டதால், தனியார் நிறுவனங்களிலிருந்து, டான்சம் நிறுவனம் மூலம் சிமெண்ட் கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி, ஒரு மூட்டை சிமெண்ட் **ரூ.250** முதல் **ரூ.260** வரை வெளிச் சந்தையில் விற்கும் நிலையில், தனியார் நிறுவனங்கள், மூட்டை ஒன்றுக்கு **220** ரூபாய் வீதம் ஊரக வளர்ச்சிட் துறை பணிகளுக்கு விற்பனை செய்ய சம்மதம் தெரிவிட்துள்ளன. இதன்படி **2008–09**ம் ஆண்டு ஊரக வளர்ச்சித் துறைப் பணிகளுக்கு இதே விலையில் சிமெண்ட் பெறப்பட்டு வருகிறது. **2009–10ம் ஆண்டிற்கு சிமெண்ட் விலை ஒரு மூட்டைக்கு ரூபாய் 215 ஆக நிர்ணயிக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 2010–11ம் ஆண்டிற்கு சிமெணட் விலை ஒரு மூட்டைக்கு ரூபாய் 210 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

## அட்டவணை – 23

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்– ஆண்டு வாரியாக

(ரூபாய் கோடியில்)

| வருடம் | ஒதுக்கீடு | செலவினம் | செலவினத்தின் சதவிகிதம் | எடுக்கப் பட்ட பணி களின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | முடிக்கப்பட்டதின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006-07 | 282 | 282 | 95 | 59,753 | 59,753 | 100 |
| 2007-08 | 282 | 288.77 | 100 | 25,917 | 25,917 | 100 |
| 2008-09 | 352.50 | 352.37 | 100 | 28,710 | 28,707 | 100 |
| 2009-10 | 399.50 | 352.66 | 88 | 22,668 | 22,157 | 98 |
| 2010-11 | 411.25 | 76.57 | 19 | 19,373 | 5,711 | 29 |

- **முழு சுகாதார இயக்கம்** திருப்திகரமான செயல்பாட்டினால், **2007-08 ம் ஆண்டு 1,474** கிராம ஊராட்சிகள் மற்றும் 5 வட்டார ஊராட்சிகள் (கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டாறு, முன்சிரை, கிள்ளியூர் & தக்களை மற்றும் திருச்சி மாவட்டத்தில் உள்ள தாத்தையங்கார்பேட்டை வட்டாரம்) '**நிர்மல் கிராம் புரஸ்கார்**' விருதுகள் பெற்றன. **2006–07**ஆம் ஆண்டில் **296** கிராம ஊராட்சிகள் '**நிர்மல் கிராம் புரஸ்கார்**' விருதுகள் பெற்றன. இந்த ஆண்டு அதிக அளவில் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதுகள் பெற்றதில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடம் பெற்றுள்ளது. 2008-09ம் ஆண்டில் **196** கிராம ஊராட்சிகள் '**நிர்மல் கிராம் புரஸ்கார்**' விருதுகள் பெற்றுள்ளன. **2009–10** ஆம் ஆண்டிற்கு இவ்விருதினை வழங்குவதற்காக, கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

## அட்டவணை – 24

## பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி – ஆண்டு வாரியாக 30.9.2010 முடிய

(ரூபாய் கோடியில்)

| வருடம் | ஒதுக்கீடு | செலவினம் | செலவினத்தின் சதவிகிதம் | எடுக்கப் பட்ட பணி களின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | முடிக்கப்பட்டதின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 | 114 | 114 | 100 | 4,208 | 4,208 | 100 |
| 2007–08 | 114 | 114 | 100 | 3,880 | 3,880 | 100 |
| 2008–09 | 114 | 114 | 100 | 4,261 | 4,261 | 100 |
| 2009–10 | 114 | 89 | 78 | 3,096 | 2,910 | 94 |
| 2010–11 | 114 | 13 | 11 | 2,411 | 522 | 22 |

- **பிற்படுத்தப்பட்ட தொகுதிகளுக்கான மான்ய நிதி –** தமிழ்நாட்டிலுள்ள 5 பிற்படுத்தபபட்ட மாவட்டங்களில் மத்திய திட்டக் குழுவால் செயல்படுத்தபபட்ட ராக்ஷ்ட்ரிய சம்விகாஸ் யோஜனா மத்திய ஊராட்சித் துறை அமைச்சகத்திற்கு 2006–07 ல் மாற்றப்பட்டு அத்திட்டம் பிற்படுத்தபபட்ட பகுதிகளுக்கான மான்யநிதி என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் செயல் திறன் (மற்றும்) தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அத்தியாவசியமான பணிகளை உள்ளாட்சி நிறுவனங்கள் சிறப்பாக செயல்ரீதியாக நடைமுறைப்படுத்த இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- மேற்கூறிய கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 6 பின் தங்கிய மாவட்டங்களின் (ஏற்கனவே ராக்ஷ்ட்ரிய சம்விகாஸ் யோஜனா திட்டம் செயல்படுத்தப்பட்ட கடலூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களும், கூடுதலாக விழுப்புரம் மாவட்டமும்) செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை சம்பந்தப்பட்ட மாவட்ட திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் மாநில அளவில் உள்ள உயர் மட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு மேற்கண்ட 6 மாவட்டங்களில் 2007-08 ம் ஆண்டுக்கான செயல் திட்டங்களையும் அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் 2009–10 ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்டவாறு அனுமதித்துள்ளது.

**அட்டவணை – 25**

**பிற்படுத்தப்பட்ட தொகுதிகளுக்கான மான்ய நிதி ஒதுக்கீடு விவரம்**
**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | மாவட்டம் | தொகை 2007-08 | | தொகை 2009–10 | | மொத்த அனுமதிக் கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப் பட்டது | விடுவிக்கப் பட்டது | அனுமதிக்கப் பட்டது | விடுவிக்க ப்பட்டது | |
| 1 | நாகப்பட்டினம் | 15.06 | 13.55 | 15.06 | 8.33 | 28.61 |
| 2 | சிவகங்கை | 15.52 | 13.96 | 15.52 | 8.71 | 29.48 |
| 3 | விழுப்புரம் | 21.73 | 19.55 | 21.73 | 14.38 | 41.28 |
| 4 | திருவண்ணாமலை | 19.27 | 17.34 | 19.27 | 10.65 | 36.61 |
| 5 | திண்டுக்கல் | 18.70 | 16.83 | 18.70 | 10.32 | 35.53 |
| 6 | கடலூர் | 17.76 | 15.98 | 17.76 | 9.70 | 33.74 |
| | **மொத்தம்** | 108.04 | 97.21 | 108.04 | 62.09 | 205.25 |

* 2008-09**ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை**

- **2010–11ம் ஆண்டிற்கு நாளது வரை ரூ.95.97 கோடி நிதி விடுவித்து மத்திய அரசு ஆணை வெளியிட்டுள்ளது.**

**III. பணியமைப்பு மற்றும் பணியாளர் நலன்**

- உதவி இயக்குநர் முதல் மக்கள் நலப்பணியாளர்கள் பணியிடம் வரை இருந்த அனைத்து காலிப் பணியிடங்களையும் கண்டறிந்து அவற்றை நிரப்பிட அரசாணைகள் வழங்கிய **முதல் துறை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே ஆகும். 17,819** காலிப்பணியிடங்களை நிரப்பிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அவற்றில் **17,549** காலிப்பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள **270** காலிப்பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் / வேலை வாய்ப்பகம் மூலம் விரைவில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சித் துறையில் தொழில்நுட்பப் பிரிவை வலுவூட்டுதல் –** 2006–07க்கென தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் **223** உதவிப் பொறியாளர்களை தேர்வு செய்ய அரசு கேட்டுக் கொண்டதில் இதுவரை **223** உதவிப் பொறியாளர்களை நியமனம் செய்ய தமிழ்நாடு தேர்வாணையம் பட்டியல் அனுப்பியுள்ளது. இதில் **179** உதவிப் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) இதுவரை மாவட்டங்களில் பணியேற்று, பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் 2007–08ம் ஆண்டுக்கு **264** உதவிப்பொறியாளர்களை (ஊரக வளர்ச்சி) தேர்வு செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை அரசு கேட்டுக் கொண்டுள்ளதில் **260** உதவிப் பொறியாளர்களை தமிழ்நாடு தேர்வாணையம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் **241** பணியாளர்கள் உதவிப்பொறியாளர்களாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் பணியேற்றுள்ளனர்.

**அட்டவணை – 26**

**31.5..2006க்கு பிறகு நிரப்பப்பட்ட தொழில்நுட்ப பணியிடங்கள்**

| வ. எண். | பணியிடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பணி மேற்பார்வையாளர்கள் | **1,836** |
| 2 | முது நிலை வரைவு அலுவலர்கள் | 29 |
| 3 | இளநிலை வரைவு அலுவலர்கள் | **108** |
| 4 | சாலை ஆய்வாளர்கள் | **589** |
| 5 | உதவிப் பொறியாளர்கள் | 427 |
| 6 | இளநிலை பொறியாளர்கள்(அ) சுனாமி திட்ட செயலாக்க அலகு(ஆ) தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 63<br>54 |

| | | |
|---|---|---|
| 7 | உதவி செயற் பொறியாளர்கள்<br>(அ) சுனாமி திட்ட செயலாக்க அலகு<br>(ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி உட் கோட்டம்<br>(இ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்<br>(ஈ) பன்னாட்டு விவசாய வளர்ச்சிக் கழகம் | <br>57<br>132<br>33<br>6 |
| 8 | செயற் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) | |
| | (அ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி உட் கோட்டம் | 32 |
| | (ஆ) சுனாமி திட்ட செயலாக்க அலகு | 13 |
| | (இ) பன்னாட்டு விவசாய வளர்ச்சிக் கழகம் | 1 |
| | **மொத்தம்** | **3,380** |

**ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதிநேர எழுத்தர்களுக்கு காலமுறை ஊதியம் அளித்தல் –**

- கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் முழு நேர ஊராட்சி உதவியாளர்களுக்கு ரூ. 1300–20–1500–25–2000 என்ற கால முறை ஊதியத்தையும், பகுதி நேர ஊராட்சி எழுத்தர்களுக்கு ரூ.625–10–725–20–925 என்ற கால முறை ஊதியத்தையும் அரசாணை நிலை எண்.175 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை நாள் 5.12.2006 மூலம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள் நிலை–2 பணியிடங்களை நிலை உயர்த்தி அனைத்து பணியிடங்களையும் ரூ.2500–5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500 தரஊதியத்துடன் ஊராட்சி உதவியாளர் பணியிடங்களாக அறிவித்து அரசாணை நிலை எண்.234, நிதித் துறை, நாள் 1.6.2009 ன் படி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி அரசாணை எண்.91 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ–5) துறை நாள் 12.8.2009ல் அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் சுமார் 11,000 ஊராட்சி உதவியாளர்கள் நிலை–2 பயன் அடைந்துள்ளனர்.

- **வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)க்கு ஊதியம் வழங்கும் தற்சார்பு அலுவலராக அதிகாரம் வழங்குதல் –** அரசு ஆணை எண். 141, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 9.8.07ல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சிகள்) தங்களின் கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கு, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கருவூலத்திலிருந்து ஊதியம் மற்றும் இதர சில்லறை செலவினங்களை மேற்கொள்ளுவது போன்று, செலவினங்களை மேற்கொள்ள அலுவலகத் தலைவராக தனியே செயல்பட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)க்கு நிதியை கையாளும் அதிகாரம் அளித்துள்ளதால், அவர் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு அலுவலக தலைவராக வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் சுதந்திரமாக செயல்பட வழி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

- **துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலை உயர்த்துதல் –** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 16.04.2008 அன்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண். 138 ஊ.வ (ம) ஊ.துறை நாள் 28.8.2008–ன்படி இத்துறையின் 2,544 விரிவாக்க அலுவலர் பணியிடங்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

- **இரவு காவலர், அலுவலக உதவியாளர் மற்றும் அதற்கு இணையான பதவிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு மக்கள் நலப் பணியாளர்களுக்கு பதவி அளித்தல்** – மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 16.04.2008 அன்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததின் அடிப்படையில், அலுவலக உதவியாளர், இரவு காவலர் மற்றும் அதற்கு இணையான பதவிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 50 சதவிகிதம் மக்கள் நலப் பணியாளர்களை ஈர்த்துக் கொள்ளுதல் குறித்து அரசாணை எண்.179 ஊ.வ மற்றும் ஊராட்சித் துறை நாள் 27.11.2008–ல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை 280 அலுவலக உதவியாளர் பணியிடங்களும், 56 இரவுக் காவலர் பணியிடங்களும் மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.

- **ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு புதிதாக ஈப்பு ஓட்டுநர் பதவி தோற்றுவித்தல் –** 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு புதிதாக ஈப்பு ஓட்டுநர் பணியிடங்கள் தோற்றுவிக்க அரசாணை எண்.67 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை நாள் 12.05.2008–இல் வெளியிடப்பட்டுள்ளது. 385 ஓட்டுநர் பணியிடங்களில் இதுவரை 384 பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் மற்றும் பதிவறை எழுத்தர்/அலுவலக உதவியாளர்/இரவுக் காவலர் ஆகிய பிரிவுகளிலிருந்து பதவி உயர்வின் மூலமாகவும் நிரப்பப்பட்டுள்ளன.

- **இடைக்கால போனஸ் உயர்வு –** கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/ விசைபம்பு இயக்குபவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு 2007-08 ஆம் ஆண்டு முதல் இடைக்கால போனஸ் தொகையாக ரூபாய் 300/– லிருந்து ரூபாய் 1,000/– ஆக உயர்த்தி வழங்க அரசு அரசாணை எண்.2(2டி) ஊரக வளர்ச்சி ஊராட்சித் துறை 2008 நாள் 12.1.2009இல் ஆணையிட்டுள்ளது. மேலும், 2008-09ம் ஆண்டிற்கு அரசாணை எண்.(ஊ.வ) 1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 11.1.2010–ன் படி ரூபாய் 1,000/– இடைக்கால போனசாக வழங்கப்பட்டுள்ளது.

- **மக்கள் நலப் பணியாளர்களுக்கு கால முறை ஊதியம் – மக்கள் நலப் பணியாளர்கள்** ரூ.950/– தொகுப்பூதியமாகவும், ரூ.50/– பயணப்படியாகவும் பெற்று வந்தனர். இவர்கள் 1.6.2009 முதல் அரசாணை நிலை எண் 234 நிதி (ஊ.கு) துறை நாள் 1.3.2009–ன் படி ரூ.2500–5000 மற்றும் ரூ.500 தர ஊதியம் என்ற கால முறை ஊதியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். அரசின் சிறப்பான நடவடிக்கை மூலம் சுமார் 12,653 மக்கள் நலப் பணியாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

- **மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு மாத ஊதியம் உயர்த்துதல் –** கிராம ஊராட்சிகளில் பணியமர்த்தப்பட்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்.234, நிதித்துறை, நாள் 1.6.2009–ன்படி மாத ஊதியமாக ரூ.600 + தற்போது பெறும் ஊதியத்தில் 25% ஆக ரூ.150/– + 1992 ஆம் ஆண்டு முதல் ரூ.20/– வீதம் வழங்கப்பட்ட அகவிலைப்படி ரூ.400/– (20 அரசாணைகள்) சேர்த்து 1.1.2006 முதல் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 43,420 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களும் 12,075 துப்புரவுப் பணியாளர்களும் பயன் அடைந்துள்ளனர்.

- **மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை மாற்றியமைத்தல் –** மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாகத் திட்டத்திற்கான மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளுக்கிணங்க மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை மாற்றியமைத்து அரசாணை நிலை எண்.53 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மஅதி – 2) நாள் 19.06.2009–இல் மாநில அரசு ஆணையிட்டுள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மாற்றி அமைக்கப்படுவதற்கு முன்பாக இருந்த அலுவலர் அமைப்பு இன்று நடைமுறையில் இல்லாத அன்றைய காலக்கட்டத்தில் இருந்த திட்டங்களை பிரதிபலிக்கும் வண்ணம் இருந்தது. மேலும் உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் கீழ்நிலை அலுவலர்கள் அவர்களின் அமைப்பு மாநில அளவில் பல்வேறு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் ஒரு சீரான அமைப்பாக இல்லாதது மட்டுமல்லாமல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு பிற துறைகளிலிருந்து அலுவலர்களை மாற்று பணியில் பெறுவதிலும் மிகுந்த சிரமம் தொடர்ந்து உணரப்பட்டது. உதவி திட்ட அலுவலர் (ஆர்), உதவி திட்ட அலுவலர் (வேஉதி), உதவி திட்ட அலுவலர் (டோக்ரா), உதவி திட்ட அலுவலர் (தொழில்கள்), உதவி திட்ட அலுவலர் (கால்நடை பராமரிப்பு), உதவி திட்ட அலுவலர் (கூட்டுறவு) மற்றும் உதவி திட்ட அலுவலர் (கணிப்பாய்வு) ஆகியப் பணிகள் நீக்கப்பட்டு, புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுள் உதவி திட்ட அலுவலர் (ஊதிய வேலை வாய்ப்பு), உதவி திட்ட அலுவலர் (உள்கட்டமைப்பு), உதவி திட்ட அலுவலர் (சுய வேலைவாய்ப்பு) மற்றும் உதவி திட்ட அலுவலர் (வீட்டு வசதி மற்றும் சுகாதாரம்) ஆகிய பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

- **உதவி செயற்பொறியாளர் (ஊ.வ பி.எம்.ஜி.எஸ்.ஒய்) மற்றும் உதவி செயற் பொறியாளர் (ஊ.வ–குடிநீர் விநியோகம்) ஆகியப் பணியிடங்களை உதவி செயற் பொறியாளர் (ஊ.வ–சாலைகள் மற்றும் பாலங்கள்) என மாற்றியமைத்தல் –** சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவைகளின் தொழில்நுட்ப கண்காணிப்பினை வலுவூட்டவும் மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ) மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் (ஊ.வ) ஆகிய அலுவலகங்களின் தொழில்நுட்பப் பிரிவினை வலுப்படுத்தவும் **உதவி செயற்பொறியாளர் (ஊ.வ –** பிஎம்ஜிஎஸ்ஒய்) மற்றும் உதவி செயற் பொறியாளர் (ஊ.வ–குடிநீர் விநியோகம்) ஆகியப் பணியிடங்களை உதவி செயற் பொறியாளர் (ஊ.வ–சாலைகள் மற்றும் பாலங்கள்) என மாற்றியமைத்து அரசு அரசாணை நிலை எண்.67 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா அ தி – 3) நாள் 20.07.2009 இல் ஆணையிட்டுள்ளது.

**IV பொது**

- **புதிய வாகனங்கள் – 2007-08** ஆம் ஆண்டு பகுதி – 2 திட்டத்தின் கீழ் , வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் (ஊராட்சி), உதவி இயக்குநர்கள் (தணிக்கை) ஆகியோர்களுக்கு **121** புதிய ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளன. **2007–08**ம் ஆண்டு, ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு **385** புதிய ஈப்புகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட உட்கோட்ட உதவி செயற்பொறியாளர்களுக்கு **409** ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பகுதி – 2 திட்டத்தின்கீழ் **24** புதிய ஈப்புகள் வாங்க ரூ. **112.50** இலட்சம் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

- **2007-08ம்** ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களுக்கு **416** படிப்பெருக்கி இயந்திரங்கள் மற்றும் **385** நிகரி இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.

- **2008-09ம்** ஆண்டு **பகுதி–2 திட்டத்தின் கீழ்** ரூ.43.50 லட்சம் மதிப்பீட்டில் 29 மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சியரக ஊரக வளர்ச்சிப் பிரிவு அலுவலகங்களுக்கு தலா **3** கணினிகள் வீதம் கூடுதல் கணினிகள் மற்றும் இதர உபபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

- ரூ **4.64** லட்சம் மதிப்பீட்டில், மாவட்டங்களிலுள்ள உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகங்களுக்கு **29** நிகரி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**2009–10ம் ஆண்டு பகுதி 2 திட்டம் –**

- **2009–10ம்** ஆண்டு பகுதி– 2 திட்டத்தின் கீழ் ரூ.**1..20** இலட்சம் மதிப்பீட்டில் அரியலுார் மாவட்ட ஆட்சியரக ஊரக வளர்ச்சிப் பிரிவு மற்றும் இரண்டு உதவி இயக்குநர்களுக்கும் கணினி மற்றும் இதர சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

- **16** மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) மற்றும் **1** உதவி இயக்குநர் (ஊராட்சி)க்கு ஒளி நகல் இயந்திரம் (Xerox Machine) வாங்க அரசு ரூ.**9.86** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து படிபெருக்கி இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

- **15** மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) மற்றும் **1** உதவி இயக்குநர் (ஊராட்சி) க்கு நிகரி இயந்திரம் வாங்க அரசு ரூ. **2.53** லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிகரி இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

- மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)கள், உதவி இயக்குநர் (ஊராட்சி)கள் மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை)களுக்கு மொத்தம் **90** லேசர் பிரிண்டர் (Laser Printer) வாங்க அரசு ரூ.**19.40** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு தலா ஒரு லேசர் பிரிண்டர் வழங்கப்பட்டுள்ளது.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திலுள்ள கூடுதல் இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு இரும்பு அலமாரிகள் ( Steel Bureau) வாங்க அரசு ரூ.6.63 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இரும்பு அலமாரிகள் வழங்கப்பட்டுள்ளது.

- கழிவு நீக்கம் செய்யப்பட்ட பழைய வாகனங்களுக்கு பதிலாக சார்நிலை அலுவலர்களுக்கு 16 புதிய வாகனங்களும் மற்றும் முக்கிய பிரமுகர் பயன்பாட்டிற்கு ஒரு புதிய வாகனமும் வாங்க அரசு ரூ.85.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் உள்ள 3 கூடுதல் இயக்குநர்களுக்கு புதிய தொலைபேசி இணைப்பு வழங்க அரசு ரூ.0.85 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கூடுதல் இயக்குநர்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

- **கூட்ட அரங்கு நவீனப்படுத்துதல்** – 2009–10 ம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திலுள்ள கூட்ட அரங்கினை மின்மாற்றி வசதிகளுடன் மேம்படுத்த அரசு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

  **பயிற்சி நிறுவனங்களை நவீனப்படுத்துதல்** – மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் தரமான பயிற்சியை வழங்கவேண்டுமெனில் அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கும் தங்கும் விடுதி, வகுப்பறை மற்றும் சமையலறை இவற்றை மேம்படுத்த 2007–08ம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் அரசு ரூ.250.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டை அனுமதித்துள்ளது.

- மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு நிகரி இயந்திரங்கள் வாங்கிட அரசு ரூ. 1.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

- மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் விடுதி கட்டடங்கள் போதுமானதாக இல்லாததால் பகுதி–2 திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மண்டல வளர்ச்சி நிறுவனங்களுக்கும் நவீன சமையலறையுடன் கூடிய புதிய விடுதி கட்டடங்களைக் கட்ட தலா ரூ.50.00 இலட்சம் நிதியை அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

- மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் விடுதிகளுக்கு மரச் சாமான்கள், படுக்கைகள் மற்றும் சமையலறைப் பாத்திரங்கள் ஆகியவை வாங்கிட தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ. 25.00 லட்சம் நிதியை அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

**2010–11 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டம் –**

- 2010–11 ம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திலுள்ள 4 மற்றும் 5வது தளத்தினை மேம்படுத்த அரசு ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதல் கட்ட வேலை நடைபெற்று வருகிறது.

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி பிரிவு அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக ரூ.25.00 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- நீலகிரி மாவட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ.1 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

- புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநருக்கான குடியிருப்பு கட்ட ரூ.28.50 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

# தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

## 1. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தினை மறு சீரமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல்

- மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான பல்வேறு மேம்பாட்டிற்கான திட்டங்களை சிறப்பாகவும் நல்ல ஒருங்கிணைப்புடனும் செயல்படுத்தும் வகையில் சூலை 2006 முதல் இந்நிறுவனம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- மகளிர் திட்டச் செயல்பாட்டை மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் பிற வட்டார அலுவலர் ஆகியோரை ஈடுபடுத்த அரசு ஆணை எண் 106, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 20.06.07–ன்படி உத்தரவிடப்பட்டது.

- வட்டார அளவில் சுய உதவிக் குழுக்களுக்கான திட்ட செயலாக்கத்தை மேலும் வலுப்படுத்த 2008-09 ஆம் ஆண்டில் மகளிர் திட்டம் மற்றும் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்ட பணிகள் துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (தணிக்கை) பதிலாக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சிறு சேமிப்பு மற்றும் பொது தொடர்புக்கு), மாற்றம் செய்து அரசு ஆணை எண் 188, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் 22.12.2008–ன்படி உத்தரவிடப்பட்டது.

- தமிழ்நாடு அரசு ஆணை எண்.14, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 04.02.2010 –ன்படி தமிழ்நாடு சுயஉதவிக் குழு நலச் சங்கத்தினை, சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

## 2. மகளிர் திட்டம்

- மகளிர் திட்டத்தின் கீழ் 30.9.2010 வரை 73.60 இலட்சம் மகளிரை உறுப்பினராக கொண்ட 4,74,874 சுயஉதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இவர்களின் மொத்த சேமிப்பு ரூபாய் 2658 கோடி ஆகும். இவற்றுள் 23,95,912 மகளிரை உறுப்பினராக கொண்ட 1,59,056 புதிய சுயஉதவிக்குழுக்கள் சூலை 2006 க்குப்பின் உருவாக்கப்பட்டது.

- இதுவரை, சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படாத பகுதிகளில் குழுக்கள் அமைப்பதும் சுய உதவிக் குழுவில் இதுவரை இணைக்கப்படாத மகளிரை குழுக்களில் இணைப்பதும் அரசின் குறிக்கோளாக உள்ளது. மேலும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து பெண்களையும் குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோரை சுய உதவிக்குழுவில் சேர்ப்பதே முக்கிய நோக்கமாகும்.

- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிக்கு முன்னுரிமை அளித்து 2006–07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டுகளில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2008-09 முதல்

- குழுக்களில் சேராத தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களைக் கொண்டு புதிய குழுக்கள் அமைக்கப்படுகின்றன.
- குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சி பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் மற்றும்
- குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்களைக் கொண்டு நகர்ப்புறத்திலும் புதிய குழுக்கள் அமைக்கப்படுகின்றது.
- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் 43,304 சுய உதவிக் குழுக்கள் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. 23,886 சுய உதவிக் குழுக்கள் குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிகளிலும் 41,373 சுய உதவிக் குழுக்கள் நகர்ப்புறத்தில் குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்களைக் கொண்டும் நகர்புறத்திலும் அமைக்கப் பட்டுள்ளது.

### 3. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

- பொதுவாக ஊரகப்பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமே சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டு வந்ததால், நகர்ப்புற சுய உதவிக் குழுக்கள் வங்கிக்கடன் இணைப்பு பெறுவதில் சிரமங்கள் இருந்தன. எனவே அரசு 2006–07 ஆம் ஆண்டு முதல் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் திட்டத்தினை அறிவித்தது. 5 வருடங்களில் 96,699 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 96.70 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டது.
- பொதுவாக சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ. 25000 முதல் 30000 வரை வருடத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால் 2008-09 ம் ஆண்டு இதுவரை சுழல் நிதி பெறாத தகுதி வாய்ந்த 1.50 இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியம் வழங்க அரசு தீர்மானித்தது.
- 2008-09 ஆம் ஆண்டில் தகுதியான அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியம் வழங்கும் வண்ணம் ரூ.150 கோடியினை அரசு அனுமதித்தது. 1,50,000 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடனுடன் கூடிய சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 2009–10 ஆம் ஆண்டில் சுழல் நிதி மானியமாக ரூபாய் 70 கோடியை அரசு அனுமதித்துள்ளது. 70,000 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மானியமாக வழங்க அனுமதி தந்துள்ளது. 69,000 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- 2010–11 ஆம் ஆண்டில் சுழல் நிதி மானியமாக ரூபாய் 70 கோடியை அரசு அனுமதித்துள்ளது. அதில் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 50,000 ஊரக சுய உதவிக் குழுக்களுக்கும்

20,000 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல்நிதி மானியமாக வழங்க அனுமதி தந்துள்ளது. இது வரை 31,869 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

## 4. கடன் இணைப்பு

- 30.09.2010 அன்றைய அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு 1989ஆம் ஆண்டுமுதல் ரூபாய் 9521.37 கோடி வங்கிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 7756.13 கோடி ஜூன் 2006–க்குப் பின் வழங்கப்பட்டுள்ளது. இது வழங்கப்பட்ட மொத்தக் கடனில் 81 சதவிகிதமாகும்.

- சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வெளிக்கடன் சுமையினை குறைக்கும் வண்ணம் சுய உதவிக் குழுக்களுக்கு போதுமான வங்கிக்கடன் வசதி கிடைக்க 2009–10 ஆம் ஆண்டில் அரசு சிறப்பு முன்னுரிமை அளிக்கிறது.

- மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் 12.04.08 அன்று நடத்திய வங்கி தலைவர்கள் கூட்டத்தில் 2008–09 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1600 கோடி கடனுதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தொகையாக போதுமான அளவு உயர்த்தி வழங்க தீர்மானிக்கப்பட்டு 2009–10 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 2400 கோடி கடனாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 2010–11 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 3000 கோடி கடனாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

- அரசின் முயற்சியினால் 25.03.2008 அன்று கூடிய மாநில அளவிலான வங்கியாளர்களின் குழுமம் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கும் போது மானியம் நீங்கலாக கீழ்க்கண்ட அளவு கடன் தொகையினை பின்பற்ற வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

| | | |
|---|---|---|
| முதல் இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.50,000 |
| இரண்டாவது இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.1,00,000 |
| மூன்றாவது இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.1,50,000 |
| நான்காவது மற்றும் பிந்தைய கடன் இணைப்புகள் | : | சுய உதவிக் குழுக்களின் தேவையின் அடிப்படையில் உயர்ந்த தொகை |

- இம்மாநிலத்தின் வரலாற்றில் முதன் முறையாக சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்க மாநில அளவில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முறையாக கண்காணிக்கப்படுகிறது,

- மகளிர் திட்டம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 2007–08 ஆம் ஆண்டு வரை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையான ரூ. 3163.39 ஐ ஒப்பிடுகையில் 2008–09 ஆம் ஆண்டில் மட்டும் 2174.57 கோடி ரூபாய் வங்கிகளில் சுய உதவிக் குழுக்களுக்க கடன் வழங்கப்பட்டுள்ளது.

- 2009–10 ஆம் ஆண்டில் ரூ. 2791.65 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது.

- 2010–11 ஆம் ஆண்டில் ரூ.1391.76 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வங்கிகளால் 30.9.2010 அன்றைய அளவில் வழங்கப்பட்டுள்ளது.

## 5. பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்

- சுய உதவிக்குழுக்களுக்கான திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டதினை செயல்படுத்தும் பொறுப்பு 1.04.2008 முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் 2006 –07, 2007–08 மற்றும் 2008–09 ஆம் ஆண்டில் 93,587 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 93.59 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் 14,274 சுய உதவிக்குழுக்கள் தொழில் தொடங்க ரூபாய் 139.13 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- 2009–10 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 128 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது அதில் ரூபாய் 55 கோடி சுழல் நிதி மானியமாக 55,000 சுய உதவிக் குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 6,000 சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க ரூபாய் 60.52 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூபாய் 54.14 கோடி சுழல் நிதி மானியமாக 54,140 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 60.52 கோடி மானியமாக 6747 சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க வழங்கப்பட்டுள்ளது.

- 2010–11 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 155.32 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது அதில் ரூபாய் 50 கோடி சுழல் நிதி மானியமாக 50,000 சுய உதவிக் குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 8,813 சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க ரூபாய் 89.78 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 30.9.2010 வரை ரூபாய் 23.11 கோடி சுழல் நிதி மானியமாக 23,109 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 31.11 கோடி மானியமாக 2,817 சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க வழங்கப்பட்டுள்ளது.

## 6. சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப் படுத்துதல்

### பொருட்காட்சிகள்

- 2010–11 ஆம் ஆண்டில் 62 மாவட்ட அளவிலான பொருட்காட்சியும் 134 வட்டார அளவிலான பொருட்காட்சியும் நடைபெற்றது. இதில் மொத்த சுய உதவிக் குழு தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை தொகை ரூ.34.88 இலட்சம் 2 மாவட்ட அளவிலும், 165 இலட்சம் 51 வட்டார அளவிலும் விற்பனை செய்யப்பட்டது. மேலும் மாநில அளவில் 2 சுய உதவிக் குழு பொருட்காட்சி நவராத்திரி, கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் ஆகிய பண்டிகைகளில் நடைபெறும்.

- சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் ரூ.15.33 கோடி செலவில் சுய உதவிக்குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு நிரந்தர சந்தை வளாகம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இதைப்போல சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு சிறந்த முறையில் ஊரகப் பகுதியில் ஒரு மாவட்டத்திற்கு மூன்று என்ற விகிதத்தில் 86 கிராம விற்பனை மையம் ரூ. 12.90 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

## 7. பயிற்சித் தொகை

- 2006–07 ஆம் ஆண்டில், பயிற்சிக்கு வருகை தரும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூபாய் 7.50 லிருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- அதே போல் ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சிக்கு வருகை தரும் பயிற்சியாளர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூபாய் 20 ல் இருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

## 8. தொண்டு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்

- மகளிர் திட்ட செயலாக்கத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கான அங்கீகார விதிமுறைகள் மற்றும் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு அந்நிறுனங்களின் செயல்பாட்டுத்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.
- புதிய விதிகளின் கீழ் தொண்டு நிறுவனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 2008–09 ஆண்டு முதல் 469 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன.

## 9. ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்பை வலுப்படுத்துதல்

2006–07 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- சிறப்பாக செயல்படும் 6912 கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூபாய் 10.000/– வழங்கி உள்ளது.
- தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் குழு அமைப்பு நிதி, கண்காணிப்பு மற்றும் பயிற்சித் தொகை பெறுவதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சான்று அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.
- சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகள், தொண்டு நிறுவனங்களுக்கு இணையாக மகளிர் திட்டத்தில் இணைந்து புதிய குழு அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கி சனநாயக முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையில் திருத்தியமைக்க அரசு ஆணை எண் 125 தேதி 21.07.08 ல் அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் இக்கூட்டமைப்புகளை தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம், 1975 ன் கீழ் பதிவு செய்வதன் மூலம், அவைகள் சட்ட ரீதியான அங்கீகாரம் பெறவும் வங்கிகள் மூலம் எளிதாக கடன் பெறவும் வழி வகை செய்யப் பட்டுள்ளது.

- தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975ல் விதிகள் 25 மற்றும் 42 ன் செயல்பாட்டில் இருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விலக்களித்து அரசாணை எண் 111 நாள் 17.11.2008 ல் அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த விலகளிப்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழிவகுக்கிறது.

- மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் வரும் 3 ஆண்டுகளில் தரமாக மறுசீரமைக்க செயல்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதுவரை 3153 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில், தர மதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் ஒரு இலட்சம் அளிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இதற்காக 2009–10 ஆம் ஆண்டில் 1000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.3.2010 வரை 1000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

- 2010–11 ஆம் ஆண்டில் 3000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூபாய் 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.9.2010 வரை 312 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

- நிதி இடையீட்டாளர் பணி என்பது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் அடிப்படை பணிகளில் ஒன்றாகும். மேலும் கூட்டமைப்புகள் சமுதாய அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு தேவையான கடன் வசதிகளை பெற்று தரும் நிதி நிறுவனமாக வளரும் என நம்பப்படுகிறது. இந்த வகையில் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இணைப்பு பெறுவதற்கும் வங்கிகள் மூலம் பெருங்கடன் பெற்று உறுப்பினர்களுக்கு கடனாக கொடுப்பதற்கு தகுதி பெறுகிறார்கள். 2009–10 ஆம் ஆண்டு முதற்கட்டமாக 102 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.27.52 கோடி பெருங்கடன் பல்வேறு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது. 2010–11 ஆம் ஆண்டு 64 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.14.83 கோடி பெருங்கடன் பல்வேறு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது.

## 10. மணிமேகலை விருதுகள்

சிறப்பாக செயலாற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை அரசு அறிவித்துள்ளது. மாநில அளவில் ஐந்து சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் ஒரு சிறந்த சுயஉதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் 3 சிறந்த சுயஉதவிக்குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

- 2006–07, 2007–08 ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கப்பட்டன. 2008–09 ஆம் ஆண்டிற்கான விருதுகள் 16.11.2009 அன்று சென்னையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

- 2009–10 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருது தொகையினை அரசு உயர்த்தியுள்ளது, மாநில அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாகவும், சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருதுத் தொகை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தியுள்ளது. மாவட்ட அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருதுத் தொகை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாகவும், சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருதுத் தொகை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு 25 ஆயிரமாக உயர்த்தியுள்ளது. 2009–10 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் கருத்துருக்கள் பரிசீலனையிலுள்ளன.

## 11. வங்கியாளர்களுக்கான விருது

- வங்கியாளர்கள் மகளிர் மேம்பாட்டில் முக்கிய பங்காற்றி வருகின்றனர். வங்கிகள் மூலம் பெருமளவில் நிதி உதவி கொடுத்து அதை பொருளாதார காரணத்திற்காகவோ அல்லது ஏனைய செலவிற்காகவோ பயன்படுத்தும் அளவிற்கு கொடுத்து உதவுகின்றனர். அவர்களின் இதர தேவைகளை கடன் வழங்கி பூர்த்தி செய்கின்றனர். எனவே வங்கியாளர்களை கௌரவிக்கும் விதமாக அரசு சிறந்த வங்கியாளர் விருது, வங்கிக்கிளைகளுக்கான விருது மாநில மற்றும் மாவட்ட அளவில் நிறுவி உள்ளது.

- மாநில அளவில் 3 சிறந்த வங்கிகளுக்கான விருது, 3 சிறந்த பிற வங்கிக்கிளைக்கான விருது மற்றும் 2 சிறந்த சுய உதவிக்குழுக்களுக்கான நுண்கடன்/ மற்றும் மகளிர் தொழில்முனைவோருக்கான சிறப்பு வங்கிக்கிளைகளுக்கான விருது போன்றவை நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் ஒரு சிறந்த வங்கிக்கான விருது (இதில் 200 வங்கிக்கிளைகளுக்கு மேல் உள்ள மாவட்டங்களில் 2 விருதுகள்) மற்றும் 3 சிறந்த வங்கிக்கிளைகளுக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன.

- 2008–09 ம் ஆண்டிற்கான மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட 3 வங்கிகளுக்கு பாராட்டு சான்றிதழுடன் கூடிய விருதும், 3 சிறந்த பிற வங்கிக்கிளைகள் மற்றும் 2 சிறந்த சுய உதவிக்குழுக்களுக்கான நுண்கடன் மற்றும் மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிகிளைகளுக்கான காசோலை விருதுகளும் 16.11.2009 அன்று வழங்கப்பட்டது. 2009–10 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் கருத்துரு பரிசீலனையிலுள்ளது.

## 12. சுய உதவிக் குழுக்களுக்கிடையே போட்டிகள்

- சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் குழு உணர்வை உருவாக்கும் நோக்கத்தில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் நடத்த 2007–08 முதல் ஆண்டு தோறும் ரூபாய் 1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இப்போட்டிகள் சுய உதவிக் குழுக்களுக்கிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

## 13 . சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

- மகளிர் சுய உதவிக்குழுக்கள் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகி பயன் பெறவும், மகளிர் திட்ட சுய உதவிக்குழுக்களுக்கு படிப்படியாக அடையாள அட்டை வழங்கதிட்டமிடப்பட்டுள்ளது.

- சுய உதவிக் குழு அடையாள அட்டைகள் சென்னை தவிர 31 மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் அடையாள அட்டைகள் அக்டோபர் மாதத்தில் வழங்கப்படும்.

## 14 . இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி

- தமிழ் நாட்டில் இதற்கு முன் கண்டிராத வகையில் பெரும் வளர்ச்சியை தொழில் துறை கண்டு வருகிறது. இவ்வளர்ச்சியின் பயனாக பொருத்தமான தொழிற் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் வேலை வாய்ப்புகளை பெறலாம். இதனைக்கருத்திற் கொண்டு. 2006–07 ஆம் ஆண்டு முதல் இளைஞர் தொழிற் பயிற்சி வழங்க அரசு அனுமதித்துள்ளது.

- 2008–09 ஆம் ஆண்டு 25000 இளைஞர்கள் பயிற்சி பெறுவதற்காக ரூ.20 கோடி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், நோக்கியா, டி.வி.எஸ், மற்றும் ஐ எல் அண்டு எப் எஸ், போன்ற சிறந்த நிறுவனங்கள் மூலம் இதுவரை 40,123 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளித்துள்ளது.

- 2009–10 ஆம் ஆண்டு 25000 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க உத்தேசித்து 31.3.2010 வரை 25,386 இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற்று வருகின்றனர்.

- 2010–11 ஆம் ஆண்டு 25000 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க உத்தேசித்து 30.9.2010 வரை 14,134 இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற்று வருகின்றனர்.

# தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

# வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கி உதவியுடன் ரூ.717.00 கோடி செலவில் 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும் ஓர் ஆற்றலளிப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இத்திட்டம் 16 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களிலுள்ள 2509 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் நவம்பர் 2005–ல் தொடங்கப்பட்டிருப்பினும், அக்டோபர் 2006 முதல் தான் தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் மொத்தம் நான்கு கட்டங்களாக நடைமுறைபடுத்தப்படுகிறது. அக்டோபர் 2006 முதல் 15 வட்டாரங்களில் உள்ள 578 கிராம ஊராட்சிகளில் முதற்கட்டமாகவும், ஏப்ரல் 2007 முதல் 15 வட்டாரங்களில் உள்ள 584 கிராம ஊராட்சிகளில் இரண்டாம் கட்டமாகவும், நவம்பர் 2008 முதல் 20 வட்டாரங்களில் உள்ள 635 கிராம ஊராட்சிகளில் மூன்றாவது கட்டமாகவும், பிப்ரவரி 2009 முதல் நான்காம் கட்ட 712 கிராம ஊராட்சிகளில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### 1. பணியமைப்பு

- மாநில, மாவட்ட மற்றும் பகுதியளவில் தேவையான பணியாளர்கள் அறிமுகப்பயிற்சிக்குப் பின் பணியிலுள்ளனர். 16 மாநில வல்லுனர்கள், 18 மாவட்ட திட்ட மேலாளர்கள், 105 உதவி திட்ட மேலாளர்கள் மற்றும் 814 திட்ட ஒருங்கிணைப்பு அணி உறுப்பினர்களும் பணியில் உள்ளனர்.
- திட்டப் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் முகத்தான், பணியாளர்களின் பணி மதிப்பீட்டின் அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்குவதற்கான ஒரு உன்னதமான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பலனாக பணியாளர்கள் பணிவிலகும் எண்ணிக்கை மிகமிகக் குறைந்துள்ளதோடு பணியாளர்களும் ஊக்கம் பெற்று பணித்திறன் மேம்பட்டுள்ளது.

### 2. மக்கள் ஆய்வு மூலம் இலக்கு மக்களை கண்டறிதல்

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் மக்கள் பங்கேற்புடன் மக்களே ஆய்வு செய்து இலக்கு மக்களை கண்டறிகின்றனர். இந்த ஆய்வுப் பணி 2,509 கிராம ஊராட்சிகளில் முடிவடைந்துள்ளது. மேற்கண்ட ஆய்வுப் பணியின் மூலம் இது வரை 5.8 இலட்சம் குடும்பங்கள் இலக்காக கண்டறியப்பட்டுள்ளன.

### 3. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமூக தணிக்கை குழுக்கள் உருவாக்குதல்

இலக்கு மக்கள் கண்டறியப்பட்டப்பின் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூக தணிக்கை குழுக்கள் போன்ற மக்கள் அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

கிராம அளவில், திட்ட செயல்பாடுகளை செயல்படுத்தும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு திட்ட நிதி நேரடியாக விடுவிக்கப்படுகிறது.

- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூக தணிக்கை குழுக்கள் 2,736 கிராம ஊராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 286 பழங்குடியினர் குடியிருப்புகளில் சிறப்பு பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- இதுவரை கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு நிதியாக ரூ.340.47/– கோடி நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

### 4. சுய உதவிக்குழுக்கள் அமைத்தல்

இத்திட்டத்தின் மூலம் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டும், ஏற்கெனவே உள்ள சுய உதவிக் குழுக்களை கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் இணைத்தும் தக்க திறன் வளர்ப்பு பயிற்சிக்கு பின் வங்கி இணைப்பு செய்து தரப்படுகிறது.

- இது வரை பெண்கள் மற்றும் இளைஞர்களைக் கொண்டு 13,847 சுய உதவிக் குழுக்களும், ஊனமுற்றோரை கொண்டு 7,623 சுய உதவிக் குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இத்திட்டத்தில் இதுவரை 21,470 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- வறுமை ஒழிப்பு சங்கங்களில் இதுவரை 38,588 சுய உதவிக்குழுக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

- இது வரை உருவாக்கப்பட்ட புதிய சுய உதவிக்குழுக்களை 13,050 சுய உதவிக் குழுக்களுக்கு இதுவரை ரூ.75.08கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது மற்றும் 1,843 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.16.64 கோடி இரண்டாம் தடவை கடன் வழங்கப்பட்டுள்ளது.

- வறுமை ஒழிப்பு சங்கங்களில் இணைக்கப்பட்ட குழுக்களில் 11,929 குழுக்களுக்கு ரூ.62.90 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது மற்றும் 5,201 குழுக்களுக்கு ரூ.57.18 கோடி இரண்டாம் தடவை கடன் வழங்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சுயஉதவிக்குழுக்கள் சமூகத்திலிருந்து உருவாக்கப்பட்ட பயிற்றுநர்களால் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் 10,027 சமூக சுயஉதவிக்குழு பயிற்றுநர்கள் உருவாக்கப்பட்டு, சுயஉதவிக்குழுக்களுக்கு அனைத்து உதவிகளையும் அளித்து வருகின்றனர்.

### 5. ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோருக்கான சிறப்புத் திட்டங்கள்

இத்திட்டம் ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோருக்கு மறுவாழ்வு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவிகள் அளிப்பதோடு, அவர்களின் உரிமைகளை பெறுவதற்கும் உதவுகிறது.

- இத்திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட 87,280 ஊனமுற்றோரில் (85 சதவிகிதத்தினருக்கு) தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

- 1,30,957 ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோருக்கு தொழில் தொடங்குவதற்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- ஊனமுற்றோர்களுக்காக உருவாக்கப்பட்ட 4,242 சுயஉதவிக்குழுக்கள் வங்கிகளுடன் இணைக்கப்பட்டு ரூ.24.63 கோடி வங்கி கடன் பெறப்பட்டுள்ளது. வங்கிகள் மூலம் ஊனமுற்றோருக்காக குறிப்பிடத் தக்க அளவில் கடன் பெற்றுள்ளது இதுவே முதன் முறையாகும்.

- கடுமையாக ஊனமுற்ற 4,684 நபர்கள் பராமரிப்பு உதவியும் 35,813 வயதானோர் முதியோர் உதவித் தொகையும் இத்திட்டம் மூலம் பெற்றுள்ளனர்.
- 11,184 ஊனமுற்றோருக்கு ரூ. 3.72 கோடி செலவில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 6. இளைஞர் மேம்பாடு

இத்திட்டம் இளைஞர்களை வளர்ச்சி பணிகளில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தவும், அவர்களின் திறன்களை வளர்த்து வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும் சிறப்பு முயற்சிகள் எடுத்து வருகிறது.

புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் உதவியுடன் 70,063 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு 56,434 இளைஞர்கள் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவை தவிர 17,487 இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அளித்திட நோக்கியா, பாக்ஸ்கான், எம்.ஆர்.எப்., அசோக் லேலாண்ட், இன்டிமேட் பேஷன்ஸ் போன்ற புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களுடன் இத்திட்டம் தொடர்பு வைத்துள்ளது.

2,736 கிராம ஊராட்சிகளில் இளைஞர் துணை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியில் 20% இளைஞர் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியினை பயன்படுத்தி இளைஞர்களை ஈடுபடுத்தி கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் பயனுள்ள செயல்பாடுகளை தொடங்கியுள்ளன. கல்வி மையங்கள், வேலைவாய்ப்பு ஆலோசனை மையங்கள், கிராம தகவல் மையங்கள், உடற்பயிற்சி கூடங்கள் ஆகியவை இந்த செயல்பாடுகளில் அடங்கும்.

## 7. ஊராட்சி அளவிலான சுயஉதவிக்குழு கூட்டமைப்புகள் மறு சீரமைப்பு செய்தல்

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில், அரசின் கொள்கைபடி ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்புகள், அனைத்து குழுக்களும் இணைந்து ஜனநாயக ரீதியாக பங்கேற்கும் வண்ணம் மறுசீரமைப்பு செய்யப்படுகின்றன. மறுசீரமைப்பு செய்யப்பட்ட பின் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 யின்கீழ் பதிவு செய்யப்படுகிறது. சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அமுதசுரபி எனும் வாழ்வாதார நிதி ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு வழங்கப்படுகிறது. இதுவரை 1,784 ஊராட்சிகளில் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் மறு சீரமைக்கப்பட்டுள்ளன. 1,244 ஊராட்சிகளுக்கு வாழ்வாதார நிதி ரூ. 90.63 கோடி இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, வங்கி மூலமாக ரூ.39.9 கோடி அளவிற்கு 178 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கி பெருங்கடன் வழங்கப்பட்டது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இந்த வங்கி பெருங்கடனை பயன்படுத்தி சுய உதவிக் குழு அங்கத்தினர்களுக்கு தேவையான வாழ்வாதார நடவடிக்கைகளுக்கும் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் உபயோகப்படுத்த வழங்கப்படும்.

## 8. வாழ்வாதார மேம்பாடு

ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இத்திட்டம் தனிநபர் மற்றும் சிறு குழுக்களின் தொழில் நடவடிக்கைகளை வங்கிகள் மூலம் பெறப்படும் நிதி உதவியுடன் மேற்கொள்ள உதவுகிறது.

மேலும் அதிக அளவில் இலக்கு மக்கள் ஈடுபட்டுள்ள தொழில்களில், தொழில் கூட்டமைப்புகளை உருவாக்கவும் துணை புரிகிறது.

மொத்தம் 4,038 உறுப்பினர்களை கொண்ட 92 தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. பால்பண்ணை, ஆயத்த ஆடை உற்பத்தி, பூ சாகுபடி, செங்கல் சூளை, வெண்பன்றி வளர்ப்பு போன்றவை கூட்டமைப்புகளால் மேற்கொள்ளப்படும் சில தொழில்கள் ஆகும்.

செப்டம்பர் 2010 வரை ரூ. 3.50/– கோடி திட்ட நிதியாக இக் கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 9. மக்கள் கற்றல் மையம் (மகமை)

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் பெற்ற அனுபவம் மற்றும் ஆற்றல்களை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு தலமாகவும், மக்கள் வழியாக மக்கள் கற்றுக் கொள்ளும் ஒரு மையமாக மகமை திகழ்கின்றது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மகமையை உருவாக்க தேவையான தொடக்க நிதியை (Initial seed money) வழங்குகிறது. அனைத்து மாவட்டங்களிலும் மகமை அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மகமைகளின் உறுப்பினர்கள் அதாவது சமூக வல்லுநர்கள் 3வது மற்றும் 4வது வட்டாரங்களிலும் மற்றும் பலவீனமாக உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கும் பயனுள்ள சேவைகளை அளித்து வருகின்றனர்.

## 10. மக்கள் சுகாதார காப்பீட்டு திட்டம்

சமூக பாதுகாப்பிற்கான இத்திட்டம் முன்மாதிரியாக விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் வட்டாரத்தில் செயல்படுகிறது. இத்திட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் 25.11.2008 அன்று துவக்கப்பட்டுள்ளது. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் கூட்டமைப்பு இத்திட்டத்தை நிர்வகிக்கும் அமைப்பாக (Third Party Administrator) செயல்படுகிறது. முன்மாதிரி திட்டத்தின் வெற்றியினை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் எல்லாபுரம் வட்டாரத்திலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் வட்டாரத்திலும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 33,983 ஏழை குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

## 11. நிதி செலவின சாதனை

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் செப்டம்பர் 2010 வரை ரூ. 454.43 கோடி திட்ட நிதி செலவிடப்பட்டுள்ளது.

# சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

# சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்
## (30.9.2010 வரை)

### ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP)

- இத்திட்டம் 06.04.2005ல் தொடங்கப்பட்டது. எனினும் 13.5.2006 வரை 4.95 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. ஆனால் இத்திட்டம் 31.10.2009 அன்று நிறைவு பெற்ற போது 292.94 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநிலத்தின் 12 ஊரக கடலோர மாவட்டங்களில் 1602 குடியிருப்புகள் அடங்கிய 257 கடலோர கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**(அ) வாழ்வாதாரத் திட்டங்கள்**

- வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி, பொருளாதார மேம்பாட்டு உதவி மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் தொடங்க மானிய உதவி ஆகியவை வழங்குவதில் இலக்கீடு 100 விழுக்காடு எய்தப்பட்டுள்ளது.

| உட்கூறுகள் | செயல்திறன் | | நிதித்திறன் (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கீடு | சாதனை | இலக்கீடு | சாதனை |
| சுழல்நிதி | 33,549 | 33,549 | 8,880.10 | 8,880.10 |
| பொருளாதார மேம்பாட்டு உதவி | 2,472 | 2,472 | 3,155.99 | 3,155.99 |
| மாற்றுத்திறனாளிகளுக்கான நிதி உதவி | 34,634 | 34,634 | 3,463.40 | 3,463.40 |

- மாற்றுத் திறனாளிகள் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வங்கிகளில் கடன் பெறுவது கடினமானதாக உள்ளது. கடலோர மாவட்டங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகள் ஒவ்வொருவருக்கும் 10,000/– ரூபாய் மான்யமாக அளித்து அதன் மூலம் தொடர் வருமானம் தரக் கூடிய ஒரு சுய தொழிலை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 34, 634 மாற்றுத் திறனாளிகளுக்கு சுமார் 34.63 கோடி ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) திறன் வளர்ப்பு மற்றும் கட்டமைப்பு வசதிகள்**

- கடலோர மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள், மீனவர்கள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினருக்கும் தேவையான திறன் வளர்ப்பு பயிற்சி அளித்திடவும், உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் 7 திட்டங்கள் சுமார் 26.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுகின்றன.

1. சுமார் 15.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **சென்னை வள்ளுவர் கோட்டம்** அருகில் சுய உதவிக் குழுக்களுக்கென ஒரு வளாகம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணி அக்டோபர் மாதம் 2010–க்குள் முடிக்கப்படும்.

2. **கடல் பாதுகாப்பு பயிற்சித் திட்டத்தின்** கீழ் மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கடல் பாதுகாப்பு முறைகளில் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் பயிற்சிகள் துவங்கப்பட்டு இதுவரை 31,959 மகளிருக்கும், 36,890 மீனவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

3. ஏழு கடலோர மாவட்டங்களில் உள்ள **93 மீனவர் சங்கங்களுக்கு** 2.96 கோடி ரூபாய் நடைமுறை மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு மூலம் வங்கிக் கடனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து அதிக வட்டிக்கு கடன் பெறுவது தடுக்கப்பட்டு, இச்சங்கங்கள் சுயமாகச் செயல்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 5,000 மீனவர் சங்க உறுப்பினர்கள் நேரடியாகவும் சுமார் 20,000 மீனவர்கள் பயனாளிகளைச் சார்ந்தும் பயன்பெற்றுள்ளனர்.

4. தஞ்சாவூர் மாவட்டத்தில் **4 நேரடி கொள்முதல் நிலையங்களும்**, நாகப்பட்டினம் மாவட்டத்தில் **11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும்** 1 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு அவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

5. 4.06 கோடி ரூபாய் செலவில் 11 கடலோர மாவட்டங்களில் **9 பால் குளிரூட்டும் நிலையங்கள், 37 பால் விநியோகிக்கும் நிலையங்கள்** கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும் 160 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. இந்த தொழிலில் ஈடுபடும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 3,645 நபர்களுக்கு பால் உற்பத்தி மற்றும் கறவை மாடுகள் பராமரித்தல் குறித்த பயிற்சியும், 400 நபர்களுக்கு பால் மற்றும் பாலிலிருந்து தயார் செய்யப்படும் பொருட்கள் விற்பனை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 160 பால் கூட்டுறவு சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு அவற்றிற்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

6. **கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்** கன்னியாகுமரி மாவட்டத்தில் 250 நெசவாளர்களுக்கு 61.09 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் அவர்களது கைத்தறிகளை மேம்பாடு செய்து புதுப்பித்தல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 8 பணி மையக் கட்டிடங்களில் சீரமைப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன.

7. விழுப்புரம் மாவட்டத்தில் 67.49 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 1000 கைவினைஞர்கள் பயன்பெறும் **கைவினைஞர் கிராமம்** அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

### (இ) சாலைகள் மற்றும் வடிகால்கள் (Roads and Drainages)

கடலோர ஊராட்சிகளில் சுமார் 699 கி.மீ. நீளத்திற்கு 610 சாலைப் பணிகள் 89 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

**(ஈ) ஊராட்சி மன்றக் கட்டிடங்களைப் புதுப்பித்தல்**

- கடலோர ஊராட்சி மன்றக் கட்டிடங்களைப் புதுப்பித்தல், கூட்ட அரங்குகள் கட்டுதல், ஆகிய 196 பணிகள் 5 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**உ) சுகாதாரம்**

- ஊரக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தனிநபர் கழிப்பறை பயன்பாடு, தன் சுத்தம், சுகாதாரம் குறித்த 21 விழிப்புணர்வு விளம்பரப் படங்கள் ரூ.67.28 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## II. ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)

**அ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்.**

- ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய 2,687 வீடுகள் கட்டும் பணி சுமார் 65.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு 2,687 வீடுகளும் முடிக்கப்பட்டுள்ளன.
- இப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், பொதுக் கட்டிடங்கள், வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குதல் ஆகியவை சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டியப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்தல்.**

- தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டியப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் 57.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 40.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 133 உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், 5.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.495 சுகாதார கழிப்பறை வசதிகளும், 2.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாழ்வான நிலப்பகுதிகளில் மண் நிரப்பும் பணிகளும், 5.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெரு விளக்குகள் மற்றும் வீடுகளுக்கு மின் இணைப்புகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவு பெற்றுள்ளன.

**இ) எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்**

- 11 கடலோர மாவட்டங்களில் அலை ஏற்றத்திலிருந்து 0–200 மீட்டருக்குள் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் , 1000 மீட்டருக்குள் உள்ள இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் மீனவர் குடியிருப்புத் திட்டங்களின் கீழ் அரசால் கட்டப்பட்ட 01.01.2006ல் 10 ஆண்டுகள் பழமையான வீடுகள் உட்பட சுமார் 18,299 வீடுகளை ராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.499.22 கோடி செலவில் மீளக் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதுவரை, 14,750 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 3,549 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- மேற்கண்ட வீடுகள் கட்டும் பகுதிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நெறிமுறைகளின் படி அடிப்படை வசதிகளான சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், குளம் சீரமைத்தல், மயானம் சீரமைப்பு, அங்கன்வாடி மையங்கள்/சமையல் கூடங்கள் கட்டுதல் போன்ற பணிகள் சுமார் 68.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,251 பணிகள் எடுக்கப்பட்டு அதில் 3,233 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்துப் பணிகளும் அக்டோபர் மாதம் 2010க்குள் முடிக்கப்படும்.

## III. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் – கடலோர சமுதாயத்தின் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறைக்கும் திட்டம் (ETRP-VRCCP)

தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மீளப் பெறவும், பாதிப்படைந்த வீடுகளை மீளக் கட்டிடவும் தமிழ்நாடு அரசு உலக வங்கியின் தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசு, இத்திட்டத்தின் கீழ் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிக்கக்கூடியவையாக அறியப்பட்ட வீடுகளை எதிர்காலத்தில் சுனாமி போன்ற பேரிடர்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் மீண்டும் கட்டித் தர முடிவு செய்துள்ளது. அதன் மூலம் பேரிடலிருந்து மீளும் தன்மை கொண்ட கடலோர சமுதாயத்தை உருவாக்க வழி வகை செய்துள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் தமிழக அரசும் உலக வங்கியும் 13.8.2009–ல் கையொப்பமிட்டுள்ளன.

அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின்கீழ் இத்துறை கீழ்க்கண்ட கட்டுமான பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. (ETRP-VRCCP)

I. கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரையிலுள்ள கடலோரப் பகுதிகளில் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட சுமார் 17,000 வீடுகளை மீளக் கட்டித் தருதல்.

II. அவசர காலத்தில் எளிதாக வெளியேறி தப்பித்து செல்லத் தேவையான வெளியேறும் சாலைகளை அமைத்தல். மேலும் வெளியேறும் சாலைகளில் பாதுகாப்பான பகுதியினை சென்றடைய ஏதுவாக வழிகாட்டுப் பலகைகள் அமைத்துத் தருதல்.

11 கடலோர மாவட்டங்களில் வருவாய்த் துறையினரால் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல் மூன்றாம் நிலை எளிதாக்குநர்களாக நியமனம் செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலம் மறு ஆய்வு செய்யப்பட்டனர். அதன்படி 15,056 வீடுகள் மீளக் கட்ட தகுதியுடையவைகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. 15056 வீடுகள் புதியதாக கட்டுவதற்காக 157 தொகுப்புக்களாக எடுக்கப்பட்டுள்ளன. எல்லா தொகுப்புகளுக்கும் ஒப்பந்தப் புள்ளி முடிக்கப்பட்டு அதில் 154 தொகுப்புகளுக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு கட்டுமான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதனமுள்ள 3 தொகுப்புகளுக்கு விரைவில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட உள்ளது. மெத்தம் உள்ள 15056 வீடுகளில் 14165 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் இடிக்கப்பட்டு 6175 வீடுகள் கட்டுமானப்பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்து வீடுகளும் திட்ட செயலாக்க காலமான டிசம்பர் 2011 க்குள் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.